DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H Selvanayagam Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

KANAGAAMBIKAI PAWN BROKERS
416 269 7198

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகின் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் ...
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1292
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday January 8, 2021

# அமெரிக்க அரசியல் தளத்தில் மீண்டும் கால் பதிக்க முடியாத "கறை"களோடு பதவி விலகவுள்ள டொனால்ட் ட்ரம்ப்



## அமெரிக்க வரலாற்றில் வன்முறைகளின் துணை கொண்டு தனது தோல்விச் சரிவை நிமிர்த்த முனைந்த ஒரு மோசமான அரசியல்வாதி

அமெரிக்கவின் பிரதான ஆட்சி மையமான "கெப்பிட்டொல் ஹில்" பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை, நாள் முழுவதுமாக அரங்கேறிய வன்முறைத் தாக்குதல்களைத் தூண்டிவிட்ட அமெரிக்க அதிபர் என்ற அவமானப் பெயரோடும், அமெரிக்காவின் அரசியல் தளத்தில் மீண்டும் கால் பதிக்க முடியாத "கறை"களோடும் தனக்கு வாக்களித்த கோடிக்கணக்கான அமெரிக்கர்களின் வசைகளுக்கு மத்தியில் இன்னும் சில நாட்களில் பதவி விலகவுள்ள டொனால்ட் ட்ரம்ப் பற்றிய பாதகமான கருத்துக்களே தற்போது உலகெங்கும் பேசு பொருளாக உள்ளன. *(உள்ளே தொடர்ச்சி 5ம் பக்கம்)*

# மனிதாபிமான அடிப்படையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள் என உறவினர்கள் கோரிக்கை!

கொரோனா தொற்றால் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் இத்தருணத்திலாவது விடுதலை செய்ய வேண்டும் என கைதிகளின் உறவினர்கள் சர்வமத தலைவர்கள் முன்னிலையில் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சர்வமத கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணம் தியாகி அறக் கொடை மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

'ஒன்றுபட்டு எமது உறவு-களை சிறை மீட்போ" எனும் தொனிப் பொருளில் குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால், இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிறை இருட்டில் இருக்கும் எமது உறவுகளை தற்கால கொரோனா வைரஸ் தொற்றும் வெகுவாக பாதித்துவரும் நிலையில் கருணை அடிப்படையில் மனிதாபினமாக இத் தருணத்திலாவது அவர்களை விடுவிக்க வேண்டுமெனவும் இதன் போது வலியுறுத்தப்பட்டது. இக் கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்தில் உள்ள சர்வமத பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் கொரோனாவால் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள உறவுகளை மனிதாபிமான அடிப்படையில் அரசாங்கம் விடுவிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அரசியல் கைதிகளை விடுதலை செய்ய கோரி ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் மதத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.




Dream Design Build
Paramount Custom Homes Ltd.
416-268-5296
www.paramountcustomhomesltd.net
Incredible Quality
Quick Turnaround
Competitive Prices
140-100 Cowdray Court, Scarborough, ON M1S 5C8

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 272 1222
905 794 4404

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

**416.298.2777**

## $375 Mo.

www.mortgageSolutions.ca

## MONTHLY SAVING $2,478

## SAVE UPTO 75% REFINANCE



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# முந்திக் கொள்ள வேண்டும் என்ற அவசரத்தில் தனது 'மூக்கை' நுழைத்த ஒரு அனுபவமற்ற தமிழ் அரசியல்வாதி

இலங்கையின் தற்போதைய கோட்டாபாய அரசில் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகத் நியமனம் செய்யப்பட்ட ஒருவரே கலாநிதி ராகவன் சுரேந்திரன் அவர்கள். அவர் தேடித் தேடி பல விடயங்களைக் கற்றுள்ளார் என்பது பலருக்கும் தெரிந்த விடயம் ஆகும். ஆதலினால்தான் அவரை முதலில் வட மாகாண ஆளுனராகப் நியமனம் செய்தது மைத்திரி அரசு. தொடர்ந்து ஆட்சியில் அமர்ந்த கோட்டாபாய அரசானது தமிழ் மகன் என்பதாலும் கற்றவர் என்பதாலும் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராக நியமனம் செய்தார். புத்த சாசனங்கள் தொடர்பான துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றவர் என்ற விடயத்தை அறிந்த தமிழர்களும் சைவர்களும் வியந்து பாராட்டிய ஒரு விடயமானவே இருந்தது.

நாம் முன்னர் குறிப்பிட்டது போலவே தேடித் தேடி அறிவியலைக் கற்றுக்கொண்டவர் அரசியலில் நுழைந்த சில மாதங்களிலேயே இலங்கைப் பாராளுமன்றத்தில் முக்கியமான ஒரு உரையாற்ற முன்வந்தார். மேற்படி விடயமானது புலம் பெயர் தமிழ் மக்களுக்கு முக்கியமான ஒன்றே ஆகும்.

எமது கனடிய வாசகர்களும் இணைய வாசகர்களும் ஏற்கெனவே வாசித்தறிந்த விடயமே அது. கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசில் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினரானவுள்ள விஜேய் தணிகாசலம் அவர்கள் மாகாணப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள ஒரு பிரேரணையே அது. இந்த மாகாணத்தில் பயிலுகின்ற அனைத்து மாணவ மாணவர்களும் மே மாதம் 18ம் திகதி தொடக்கம் ஒரு வார காலத்திற்கு 'தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரமாக' மாகாண அரசால் அங்கீகரிக்கப்பெற்று அனைத்துப் பாடசாலைகளிலும் கற்பிக்கப்படும் ஒரு அம்சமாக அமையப்போகின்றது. இந்த விடயத்தை கனடாவில் வாழும் சிங்கள அமைப்புக்கள் சில இலங்கை அரசிற்கு எடுத்துச் செல்ல, "அதை நானே செய்கின்றேன்" என்று கலாநிதி சுரேன் ராகவன் அவர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

அவருடைய உரையானது மிகுந்த அவசரத்தில் தயாரிக்கப்பெற்றுது என்புத நன்கு புலனாகியது. அதுவும் உள்நோக்கம் கொண்ட ஒன்றாகவே அமைந்தது. குறிப்பாக சகோதரர் விஜேய் தணிகாசலம் அவர்கள் பிறந்த ஊரை மிகவும் அழுத்தி உச்சரித்து (சிங்கள உறுப்பினர்களின் பாராட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில்) பேசிய விடயம் எம்மை வெறுப்புக்குள் ஆழ்த்தியது என்பதை இந்த பக்கத்தில் பதிவு செய்கின்றோம். மேலும், கனடா வாழ் தமிழர்களையும், விஜேய் தணிகாசலம் போன்ற அரசியல்வாதிகளையும் அச்சுறுத்தும் வகையிலும் மன்றாடுவது போன்றும் இருந்ததும் இங்கு கவனிக்க வேண்டிய விடயங்களில சிலவாகும். மேலும் தனது உரையில் அவசரமும் பதட்டமும் காரணமாக முதலில் ஒன்றாரியோ முதல்வர் டக்போர்ட் என்று குறிப்பிட்டவர் பின்னர் ஒன்றாரியோ பிரதமர் என்று குறிப்பிட்டது போன்ற பல தவறுகள் அவரது உரையில் அகப்பட்டுக்கொள்ள, மிகவும் வெறுப்பை ஊட்டுவதாகவே இருந்ததை ஆயிரக்கணக்கான புலம் பெயர் தமிழர்கள் உணர்ந்திருப்பார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

பராமரிப்பாளர் தேவை

ஸ்காபரோவில் வசிக்கும் 82 வயதுடைய பெண்மணியை எமது வீட்டில் தங்கி பராமரிக்க ஒரு பெண் தேவைப்படுகின்றார். சமையல் மற்றும் வீட்டு வேலைகளும் செய்யக் கூடியவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
647 806 8435

அறை வாடகைக்கு உ ண்டு

ஸ்காபரோ நகரில் Birchmount and FInch சந்திப்புக்கு அருகில் உள்ள Apartment ஒன்றில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. சமையல் அறை பயன்படுத்தலாம் பஸ் வசதிகள், கடைகள், வைத்திய நிலையம், கோவில் அனைத்தும் அருகில் உண்டு.

Call: 905- 903 6466




மணமகன் தேவை

கனடாவில் வசிக்கும் யாழ்ப்பாண இந்து மதத்தைச் சேர்ந்தவரும், உயர்ந்த பதவி வகிப்பவரும், 30 வயதுடையவருமான மணமகளுக்கு, கனடாவில் வசிக்கும்படித்த மணமகன் ஒருவரை மணமகளின் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் 35 வயதுக்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு:
(416) 786-5016
அல்லது dyrajah@gmail.com

# ஈழத்தமிழர்களுக்கு, குற்றவாளியே நீதி வழங்குவதா? என கண்டனம் தெரிவிக்கிறார் பழ.நெடுமாறன்



தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில, "இலங்கையில் வாழும் சிறுபான்மையினரான தமிழர்களுக்கான உரிமைகளை வழங்குவது, அவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வது, சமத்துவத்தை ஏற்படுத்துவது உள்ளிட்ட விவகாரங்களில் அந்நாட்டு அரசே முடிவெடுக்கவேண்டும்.

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும், அந்நாட்டு அரசுதான் முடிவெடுக்கவேண்டும்" என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இலங்கையின் அதிபரையும், வெளியுறவுத் துறை அமைச்சரையும் சந்தித்துப் பேசிய பிறகு கொழும்புவில் இவ்வாறு தெரிவித்திருப்பது அதிர்ச்சியை அளிக்கிறது. இலங்கையில் வாழும் தமிழரை இன ரீதியாகத் திட்டமிட்டுப் பலவகையிலும் ஒடுக்கியும், அவர்களின் உரிமைகளை அடியோடு பறித்தும், அநீதியை இழைத்தும் வரும் இலங்கை அரசு, ஈழத் தமிழர்களுக்கு எல்லாவற்றையும் வழங்கும் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் அறிவித்திருப்பதை மிக வன்மையாகக் கண்டிக்கிறேன்.

குற்றவாளியே நீதி வழங்குவார் என அமைச்சர் கூறியிருப்பது கேலிக் கூத்தாகும். 1987ஆம் ஆண்டில் இந்திய அரசும், இலங்கை அரசும் செய்துகொண்ட உடன்பாட்டின் எந்தப் பிரிவையும் இலங்கை அரசு இதுவரை நிறைவேற்றவில்லை, 13ஆவது சட்டத் திருத்தத்தை மதிக்கவும் இல்லை. இந்திய-இலங்கை அரசுகள் செய்துகொண்ட உடன்பாட்டை நிறைவேற்ற வேண்டும் என வற்புறுத்தவேண்டிய இந்திய அரசு, ஈழத் தமிழர்களை அடியோடு கைகழுவி விட்டது என்பதையே வெளியுறவுத் துறை அமைச்சரின் அறிவிப்பு எடுத்துக்காட்டுகிறது.

# ஸ்காபுறோ Tendercare முதியோர் இல்லத்தில் மேலும் மரணங்கள் சம்பவித்தது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் கவலை தெரிவிப்பு



ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள Tendercare முதியோர் இல்லத்தில் ஏற்கெனவே பல மரணங்கள் சம்பவித்த நிலையில் மேலும் அதிகளவு மரணங்கள் சம்பவித்தது தொடர்பாக அரசியல் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இந்த முதியோர் நிலையத்தில் கொரோனாத் தொற்று காரணமாகவே பல மரணங்கள் கடந்த சில மாதங்களாக நிகழ்ந்துள்ள நிலையில், தொடர்ந்தும் மரணங்கள் சம்பவிப்பதற்கு யார் பொறுப்பேற்பது என்றும் மரணம் அடைந்தவர்களின் உறவினர்கள் முதியோர் இல்லத்தின் நிர்வாகிகளிடமிருந்தும், அரசியலவாதிகளிடமிருந்தும் கருத்துக்களை கேட்பதாகவும் எமக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பாக நோர்த் யோர்க் வைத்தியசாலை நிர்வாகம் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையை வெளியிடுவதில் தாமதம் காட்டுவதாகவும் மேற்படி முதியோர் இல்லத்தினரும் அதில் அக்கறை காட்டுவது இல்லை என்றும் ஸ்காபுறொ தென்-மேற்கு தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி டொலி பேகம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

"மேற்படி ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள Tendercare முதியோர் இல்லத்தில் ஏற்கெனவே சம்பவித்த மரணங்களோடு தற்போது மரணங்களின் எண்ணிக்கை 188 ஆக உயர்ந்துள்ளது என்றும், இவற்றைப்பபற்றி ஆட்சியில் உள்ளவர்கள் எவருமே கவனிப்பது இல்லை என்றும் தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக ஒன்றாரியோ மாகாண அரசு 10000 பணியார்களை புதிதான வேலைக்கு அமர்த்தியிருப்பதாக கூறியிருந்தாலும், அது ஒழுங்காக இடம்பெறுகின்றதா என்று யார் கவனிக்கின்றார்கள் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

# ஜனாதிபதி பதவிக்கே இழுக்கை ஏற்படுத்தியுள்ள தோல்வி கண்ட டொனால்ட் ட்ரம்ப்

அமெரிக்க அரசியல் வரலாற்றில் எத்தனையோ ஜனாதிபதிகளைச் சந்தித்த அமெரிக்கப் பிரஜைகளும் அதைவிட உலகத் தலைவர்களும் தற்போது நடைபெற்று முடிந்து புதிய ஜனாதிபதி பதவியேற்பு வைபவம் இந்த மாதம் 20ம் திகதி நடைபெறவுள்ள வேளையில் இடம்பெறும் வழக்கத்திற்கு மாறான சம்பவங்களினால் என்ன நடக்குமோ என்று எண்ணியவண்ணம் உள்ளார்கள் என்பதே உண்மை.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில், தோற்கடிப்பட்டவராக அறிவிக்கப்பட்ட, ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஜோர்ஜியா மாநில உயர் தேர்தல் அதிகாரிக்கு அழைப்பு விடுத்து, தமக்கு சாதமாக தேர்தல் முடிவுகளை மீண்டும் எண்ணும்படியும், அதனை செய்யாவிட்டால் பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுக்க வேண்டி இருக்கும் என்று எச்சரிக்கின்ற ஒலிப்பதிவு அம்பலமாகியுள்ளது. இதனை வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை வெளியிட்டுள்ளதனால், அமெரிக்கா எங்கும் மக்களும் அரசியல் தலைவர்களும் பதட்டமடைந்துள்ளனர். வழக்கத்திற்கு மாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று அஞ்சுகின்றனர்.

அரை மணி நேரம் கொண்ட இந்த தொலைபேசி அழைப்பில், ஜோர்ஜியாவில் தேர்தல் முடிவை மாற்றும் டிரம்பின் முயற்சி வெளிப்படுகிறது. இங்கு ஜனநாயகக் கட்சியின் ஜோ பைடன் 11,779 வாக்குகள் இடைவெளியில் வெற்றி பெற்றார்.

நவம்பர் 3ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தாம் கணிசமான வாக்கு வித்தியாசத்தில் தோல்வியுற்றபோதும், பைடனின் வெற்றியை ஏற்க டிரம்ப் தொடர்ந்து மறுத்து வருகிறார். பல மாநிலங்களிலும் தேர்தல் முடிவை மாற்றும் டிரம்பின் முயற்சி தோல்வி அடைந்தது.

ஜோர்ஜியாவில் பல முறை தேர்தல் முடிவுகள் மீளாய்வுக்கும் மறு வாக்கு எண்ணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்மூலம் பைடன் அங்கு வெற்றியீட்டி இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதிகாரிகள் அந்த முடிவை உறுதி செய்திருக்கும் நிலையில் அமெரிக்க பாராளுமன்றத்தில் நாளை புதன்கிழமை அதற்கு ஒப்புதல் அளித்து வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

குடியரசுக் கட்டிசியைச் சேர்ந்த ஜோர்ஜியா மாநில செயலாளர் பிரெட் ரெபன்பெர்கருக்கு அந்த தொலைபேசி அழைப்பில், "இதனைச் செய்ய நான் எதிர்பார்க்கிறேன். ஒரு வாக்கு மாத்திரம் அதிகமாக, வெறும் 11,780 வாக்குகள் எனக்குத் தேவையாக இருக்கிறது. அது மாநிலத்தில் நாம் வெற்றிபெறப் போதுமானது" என்று டிரம்ப் குறிப்பிடுகிறார்.

எனினும் ஜோர்ஜியாவின் தேர்தல் முடிவுகள் சரியானது என்று அதற்கு ரெபன்பெர்கர் டிரம்புக்கு பதிலளித்திருப்பது அந்த ஒலிப்பதிவில் பதிவாகியுள்ளது. மேலும், ஜோர்ஜியா மாநில தேர்தல் முடிவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும் டிரம்ப் அந்த ஒலிப்பதிவில் கூறுகிறார்.

டிரம்பின் தொடர் அழுத்தம் மற்றும் மிரட்டல் தொனியிலான பேச்சுக்கு பதிலளித்த ரெபன்பெர்கர், "உங்களிடம் தகவல்களைச் சமர்ப்பிக்கும் நபர்கள் இருக்கிறார்கள். அதேபோன்று எங்களிடமும் இருக்கிறார்கள். எனவே, இந்த விவகாரம் குறித்து நீதிமன்றமே ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். ஏனெனில், நாங்கள் எங்கள் தரவுகள் சரியானவை என்று உறுதியாக நம்புகிறோம்" என்று பதிலளித்துள்ளார்.

அமெரிக்க அரசியல் களத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள இந்த ஒலிப்பதிவு குறித்து இதுவரை வெள்ளை மாளிகை கருத்தேதும் தெரிவிக்கவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வாக்குப்பதிவு நடந்த கடந்த நவம்பர் 3ஆம் திகதி முதல், அதில் பெரியளவில் முறைகேடு நடந்துள்ளதாக குற்றஞ்சாட்டி வரும் டிரம்ப், அதற்குரிய எவ்வித ஆதாரத்தையும் இதுவரை அளிக்கவில்லை.

மறுவாக்கு எண்ணிக்கை, சட்டரீதியிலான முறையீடுகளுக்கு பின்னர், அமெரிக்காவின் 50 மாநில நிர்வாகங்களும் இறுதி தேர்தல் முடிவுகளை ஏற்கனவே அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளன. மேலும், பைடனின் வெற்றிக்கு எதிராக தொடரப்பட்ட 60 வழக்குகளை அந்த நாட்டு நீதிமன்றங்கள் நிராகரித்துள்ளன.



இது இவ்வாறிருக்க, வெற்றி பெற்ற ஜனாதிபதி வேட்பாளரும் ஜனநாயக கட்சியைச் சேர்ந்தவருமான ஜோ பைடன் எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்பார் என்ற முழு நம்பிக்கையில் உள்ளதாக பல அரசியல் தலைவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள் என்பதே உண்மை.





## இடையூறு இல்லாத ஆனந்தம். அதி-வேக விமான பயணங்கள்.

### *கொழும்பு மற்றும் இதர பிற பயண இலக்குகளுக்கு சுலபமான இணைப்புகள்†*

மத்திய கிழக்கு, இந்திய துணைக்கண்டம் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு சுலபமான பயண இணைப்புகளுக்கு வசதி செய்துகொடுக்கும் எங்கள் டோரொன்டொ -தோஹா அதிவேக விமானப் பயணங்கள் நீங்கள் உங்கள் அன்புக்குரியவர்களுடன் மீண்டும் சேர்ந்திருக்க வழி அமைத்துக் கொடுக்கும்†.

நீங்கள் தோஹா செல்லும் வழியில், விருது பெற்றுத் தந்த சேவைகளை அனுபவித்து மகிழுங்கள், **Boeing 787 Dreamliner** விமானத்தில் மூன்று வகை சேவைகளிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்து சௌகரியத்தின் உச்சத்தில் திளைத்திருங்கள், அதில் **Air Canada Signature Class** கிடைநிலை-தட்டை இருக்கைகள், இடம் அதிகமிருக்கும் பிரீமியம் எகானமி வகுப்பு மற்றும் வசதியான எகானமி வகுப்பும் அடங்கும்.

மாற்றும் கட்டணம் இல்லாத* விரிவான புக்கிங் ஆப்ஷன்கள், நெகிழ்வு மற்றும் துறையில் முன்னணி இடத்திலிருக்கும் **Air Canada CleanCare+** புரொக்ராம், உங்கள் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் தொடுவதற்கு அவசியமில்லாத பையோசேஃப்டி நடவடிக்கைகள் பின்பற்றப்படும் அதிகரித்த பாதுகாப்பு ஆகிய வசதிகளுடன் உங்கள் அடுத்த பயணத்தை இப்பொழுது திட்டமிடுங்கள்.

**aircanada.com**-ல் இப்பொழுதே புக் செய்யுங்கள் அல்லது உங்கள் டிராவல் ஏஜென்டுடன் தொடர்பு கொள்ளுங்கள்

Voted Best Airline in North America

A STAR ALLIANCE MEMBER | AIR CANADA

†Connection flights beyond Doha operated by Qatar Airways.
*You can make a one-time change without a fee for all new or existing bookings made through February 28, 2021, for original travel between March 1, 2020, and February 28, 2022.

# அமெரிக்க அரசியல் தளத்தில் மீண்டும் கால் பதிக்க முடியாத "கறை"களோடு பதவி விலகவுள்ள டொனால்ட் ட்ரம்ப்

## வன்முறைகளின் துணை கொண்டு தனது தோல்வியைச் சரி செய்ய முனைந்த ஒரு "முன்னாள்" ஜனாதிபதி



அமெரிக்கவின் பிரதான ஆட்சி மையமான "கெப்பிட்டொல் ஹில்" பகுதியில் நேற்று நாள் முழுவதுமாக அரங்கேறிய வன்முறையை தூண்டிவிட்ட அமெரிக்க அதிபர் என்ற அவமானப் பெயரோடும் அத்துடன் அமெரிக்காவின் அரசியல் தளத்தில் மீண்டும் கால் பதிக்க முடியாத "கறை"களோடும் தனக்கு வாக்களித்த னோடிக்கணக்கான அமெரிக்கர்களின் திட்டுக்களுக்கு மத்தியில் இன்னும் சில நாட்களில் பதவி விலகவுள்ள டொனால்ட் ட்ரம்ப் பற்றிய பாதகமான கருத்துக்க்ளே தற்போது உலகெங்கும் பேசு பொருளாக உள்ளன.

இவ்வாறான நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பே வன்முறையை தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்த அவமானம் என உலக நாடுகளின் தலைவர்களும் கண்டனம் தெரிவித்து வருகின்ற நிலையில் அமெரிக்காவில் இதுவரை காலமும் இடம்பெறாத அரசியல் வன்முறை இது என்றும் அதுவும் தற்போது ஜனாதிபதியாக உள்ளவரே இவ்வாறான வன்முறையாளராகவும் இருந்துள்ளாருர் என்ற கேள்வியையும் அமெரிக்கத் தலைவர்கள் எழுப்பியுள்ளனர்

அமெரிக்காவில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்றதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் நிகழ்வை தடுக்கும் வகையில், டொனால்ட் ட்ரம்ப் தமது ஆதரவாளர்களுக்கு 6ம் திகதி புதன்கிழமை திட்டமிட்டு செயற்பட்டுள்ளனர் என்பது தற்போது தெரிவந்துள்ளது.



இந்த நிலையில் கெபிட்டல் கட்டடத்தில் 6ம் திகதி காலை அமெரிக்காவின் தொகுதி ரீ-தியான வாக்குகளை பரிசீலனை செய்து ஜோ பைடன் வெற்றியாளர் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும் பணிகள் தொடங்கின. அதற்கான பணிகள் நடந்துகொண்டிருந்தன.

ஏற்கெனவே ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக ட்ரம்பினால் அழைக்கப்பட்டு ஆதரவாளர்கள் என்ற பெயரோடு கூடியிருந்த வன்முறையாளர்கள் இந்த பணிகளை தடுத்து நிறுத்த ட கெபிட்டல் கட்டடத்திற்குள் நுழைந்தனர். அப்போது கட்டடத்தின் ஜன்னல்களை உடைப்பது, அங்கிருந்த பொருட்களை சூறையாடுவது என கலவரமாக மாறியது குறித்த போராட்டத்தில் ட்ரம்ப் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டதுடன் அரச நிர்வாக செயலகத்தின் பல பிரதான பகுதிகையும் சேதப்படுத்தினர்

அந்த நேரத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்த ட்ரம்ப் ஆதரவாளர்கள் போ-லீஸாரால் கட்டுப்படுத்த முடியாத நிலையின் போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு பெண் ஒருவர் பலியானார். சில கலவரக்காரரர்கள் பக்கச் சுவற்றைப் பிடித்து ஏறிச் சென்று நாடாளுமன்ற செனட் அவைக்குள் நுழைந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தாக்குதலிலிருந்து தப்பிக்க ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.



மேற்படி ட்ரம்ப்பின் வன்முறையாளர்கள் நடத்திய தாக்குதல்கள் தொடர்பாக கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட நாடாளுமன்றத்தின் சபாநாயகர் திருமதி நான்சி பொலோசி மற்றும் தற்போதைய உபஜனாதிபதி மைக் பென்ஸ் ஆகியோர் இந்த தாக்குதல்கள் அமெரிக்காவின் ஜனநாயக விழுமியங்களுக்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளன என்று தெரிவித்தார்கள். அவர் நாடாளுமன்றக் கட்டடத்திற்குள் வாக்குகள் மீ-ளவும் எண்ணும் பணிகளுக்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

இதற்கு முன்னர் 200 ஆண்டுகளுக்கு முன்னர் நாடாளுமன்ற கட்டடத்திற்குள் இது போன்ற வன்முறை நிகழ்ந்துள்ளதாவும் தற்போது இவ்வாறு இடம்பெற்றுள்ளமை அமெரிக்க அரசியல் ஜனநாயகத்திற்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் பேசப்படுகின்றது. இந்த நிலையில் தற்போது இடம்பெறும் வன்முறை தொடர்பில் உலகத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்கள். நோர்வே நாட்டின் பிரதமர் எர்னா சோல்பெர்க் கூறுகையில், வா' ிங்டனில் நாம் பார்ப்பது முற்றிலும் ஏற்க முடியாதது. இது ஜனநாயகத்தின் மீதான தாக்குதலாகும் எனத் தெரிவித்துள்ளார்.கேப்பிடல் கட்டடம் மீண்டும் பாதுகாப்புப் ப-டையின் கட்டுப்பாட்டுக்குள் வந்து, நிறுத்தப்பட்ட நாடாளுமன்றக் கூட்டம் மீண்டும் தொடங்கியுள்ளது.இச்சம்பவத்தில் இதுவரை பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், ஆர்பாட்டக்காரர்களிடமிருந்து துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கலவரம் குறித்து ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்புக்காக காத்திருக்கும் ஜோ பைடன், தனது கண்டனைத்தை வெளியிட்டதோடு, டொனால்ட் ட்ரம்ப் தனது தோல்வியை ஏற்க மறுத்த வன்முறை வெளிப்பாடே இதுவென்றும், ட்ரம்ப் தனது கும்பலை போராட்டத்துக்கு தூண்டிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் ட்ரம்ப் அவர்களுக்கு வாக்களித்த மில்லியன் கணக்கான வாக்காளர்கள் இதற்கு பொறுப்பாக மாட்டார்கள் என்றும் தெரிவித்தார்., ஜனநாயகம் கடுமையான தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கூறிய அவர், நாட்டின் வரலாற்றில் இது ஒரு இருண்ட தருணம் எனவும் தெரிவித்துள்ளார்.



இதனைத் தொடர்ந்து தனது ஆதரவாளர்களை வீட்டுக்குத் திரும்புமாறு தெரிவித்த ட்ரம்ப் வெளியிட்டுள்ள வீடியோவை, தேர்தல் விதிமுறை மீறல் மற்றம் வன்முறையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்றும் இந்த வன்முறையை தூண்டி விட்ட ட்ரம்ப் இன்னும் வெள்ளை மாளிகையில் தங்கியிக்க அருகதை இல்லாதவர் என் றும் தெரிவித்தனர்.

இறுதியில், ஜனாதிபதியாக ஜோ பைடன் தெரிவாகியுள்ளதாக உத்தியோகபூர்வமாக தற்போது அறிவிக்கப்பட்டு அவரது வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த சம்பவங்கள் தொடர்பில் பிரதி பாதுகாப்பு ஆலோசகர் மெட் பொட்டிங்கர் உள்ளிட்ட வெள்ளை மாளிகை நிர்வாக அதிகாரிகள் நால்வர் தங்களது பதவிகளை இராஜினாமாசெய்துள்ளனர்.

வன்முறையை தூண்டி வேடிக்கை பார்த்ததாக, காரசாரமான விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப், இன்னும் 13 நாள்கள் மட்டுமே ஜனாதிபதியாக பணியாற்றுவார் என இருந்த நிலையில், தற்போது மிகவும் மோசமான ஜனாதிபதி என்ற பெயருடன் தனது பதவியிலிருந்து தூக்கி எறியப்படவுள்ளார் என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாடாளுமன்றக் கட்டட தாக்குதல் காரணமாக உலக தலைவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் சிக்கி தவிக்கும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பதவி-க் காலம் நிறைவடைவதற்கு முன்னதாகவே பதவியிலிருந்து நீக்கப்படவுள்ளதாகவும் எதிர்பார்க்கப்படுகின்றது.



இதேவேளை ட்ரம்பை பதவியில் இருந்து நீக்க அரசமைப்புச் சட்டத்தில் வழி இருப்பதாகவும், அதை பயன்படுத்த வேண்டும் எனவும் வெர்மான்ட் மாகாண குடியரசுக் கட்சி ஆளுநர், தேசிய உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர், என்.ஏ.ஏ.சி.பி. (நேஷனல் அசோசியேஷன் ஃபார் அட்வான்ஸ்மென்ட் ஆஃப் கலர்ட் பீப்புள்) தலைவர் உள்ளிட்டோர் மைக் பென்சை சந்தித்து கோரியுள்ளனர்.

அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட அந்த 25ஆவது திருத்தத்தின் படி, ஜனாதிபதிக்கு அவரது கடமையை ஆற்ற முடியாத நிலை ஏற்பட்டால் அவரது பொறுப்புகள் வேறொருவருக்கு மாற்றப்படலாம். எனவும் 1967ஆம் ஆண்டு இந்த சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டதில் இருந்து ஒரு முறைகூட பயன்படுத்தப்பட்டதில்லை. ஆனால் இப்படியொரு சரித்திர மாற்றம் நிகழுமா என பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏற்கெனவே திட்டமிட்ட வகையில் நாடாளுமன்றத்திற்குள் மூர்க்கத்துடன் நுழைந்து காங்கிரஸ் உறுப்பினர்களைத் தேடி அலைந்து கொண்டிருந்தவேளை நாடாளுமன்றப் பணியாளர்கள் கதவுகளை மூடி அவர்களை தடுத்ததுடன் மேசைக-ளின் கீழ் பதுங்கிக்கொண்டனர். அங்கு தாக்குதல் சம்பசங்களும் இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

இதே வேளை செனற் சபையில் சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்த ஒருவர் சபாநாயகரின் மேசையிலிருந்து கீழே விழுந்து கிடந்த ஆவணங்களை தனது சப்பாத்துக்காலால் மிதித்தார் என்றும் காங்கிரஸின் சுவர்களில் பல வருடங்களாக பொறிக்கப்பட்டிருந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்சின்னங்கள் கீழே பிடுங்கி எறியப்பட்டன என்றும் அங்கிருந்து கிடைத்த புகைப்படங்களிலிருந்து தெரியவருகின்றது டிரம்பின் பதாகைகளும் கூட்டமைப்பின் கொடிகளையும் நாடாளுமன்றத்தின் கைவிடப்பட்ட மண்டபங்கள் வழியாக டிரம்பின் ஆதரவாளர்கள் எடுத்துச்சென்றனர்.

நாடாளுமன்றத்திற்குள்சில அலுவலகங்களில் பணியாளர்கள் கதவை பாதுகாப்பிற்காக மூடிக்கொண்டு மேசைகளின் கீழ் பதுங்கிக் கொண்டனர். நாடாளுமன்ற பொலிஸார் எங்கே ஒரு பணியாளர் தனது நண்பருக்கு குறுஞ்செய்தியொன்றை அனுப்பினார்.பொலிஸாரால் டிரம்பின் ஆதரவாளர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இது இவ்வாறிருக்க வெளியே உள்ள தாழ்வாரங்களில் டிரம்பின் ஆதரவாளர்களால் சுதந்திரமாக நடமாட முடிந்தது,தாங்கள் தங்கள் எதிரிகள் எனக் கருதிய காங்கிரஸ் உறுப்பினர்களை அவர்கள் மூர்க்கத்துடன் தேடினார்கள்.

சில நிமிடங்களிற்கு முன்னர் தேர்தல் முடிவுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுக்கொண்டிருந்த செனட் அறைக்குள் அவர்கள் நுழைந்தனர். உரையாற்றுவதற்கு பயன்படுத்தப்படும் பகுதிக்கு சென்ற கலகக்காரர்களில் ஒருவர் டிரம்ப் தேர்தலில் வெற்றிபெற்றார் என கூச்சலிட்டார்.



நாடாளுமன்ற கட்டிடத்திற்குள் டிரம்பின் ஆதரவாளர்கள் பெருமளவில் நுழையத் தொடங்க பொலிஸார் அவர்கள் மீது கண்ணீர் புகை பிரயோகத்தினை மேற்கொண்டனர். இதன்போது சுடப்பட்ட பெண்ணொருவர் பின்னர் காயம் காரணமாக உயிரிழந்தார் என வொீங்டன் பொ-லிஸார் தெரிவித்தனர். வெடிபொருள் ஒன்றும் மீட்கப்பட்டது.

கட்டிடத்திற்கு வெளியே காணப்பட்ட தொலைக்காட்சி பணியாளர்களை கலகக்காரர்கள் தாக்கினர். பொலிஸார் பலரும் காயமடைந்தனர். நான்கு வருடங்களுக்கு முன்னர் பதவியேற்றவேளை டிரம்ப் அமெரிக்க படுகொலை குறித்த அச்சத்தை ஏற்படுத்தினார்.

பல மாதங்களாக டிரம்ப் தெரிவித்து வந்தது போன்று அவரை உலகின் மிகவும் வலுவான அதிகாரம் மிக்க பதவிக்கு கொண்டுபோய் சேர்த்த அரசியல் முறையை படுகொலை செய்வதற்கு டிரம்ப் தயாராகயிருந்தார் என்பது தற்போது புலனாகியுள்ளது.

அமெரிக்காவில் நாடாளுமன்றத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்தும் தேர்தல் முடிவுகளை மாற்றியமைப்பதற்கான முயற்சிகள் குறித்தும் உலக தலைவர்கள் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்.

கனடிய பிரதமர் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் எமது அயல்நாட்டில் இவ்வாறு நடைபெற்றதை கனடியர்கள் எற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும், அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று முடிவுகள் வெளியாவதற்கு முன்னரே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும் என்று தான் எதிர்பார்த்ததாகவும், அது பற்றி கனடிய மக்களுக்கு தான் எச்சரித்தாவும் புதன்கிழமை ஞாபகப்படுத்தினார்.




அமெரிக்க நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து அதிர்ச்சியடைந்துள்ளதாக ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகம் அன்டோனியோ கட்டரஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சூழ்நிலைகளில் அரசி-யல் தலைவர்கள் தங்கள் ஆதரவாளர்களை வன்முறைகளை கைவிடுமாறு வலியுறுத்துவது அவசியம் என தெரிவித்துள்ள அவர் ஜனநாயக நடைமுறைகளை பின்பற்றுமாறும்சட்டத்தின் ஆட்சியை மதிக்குமாறும் அரசியல் தலைவர்கள் தங்கள் ஆதரவாளர்களை கேட்டுக்கொள்ளவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விடயங்களை அவமானகரமா-னவை என பிரிட்டிஸ் பிரதமர் பொறிஸ்ஜோன்சன் தனடுது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார். அமெரிக்க சர்வதேச அளவில் ஜனநாயகத்திற்கு ஆதரவான நாடு அங்கு அமைதியான விதத்தில் உரிய முறையில் அதிகார மாற்றம் இடம்பெறுவது முக்கியம் எனவும் பொறிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

வோசிங்டனில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்களின் தலைவர்சார்லெஸ் மைக்கல் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார். அமெரிக்க காங்கிரஸ் ஜனநாயகத்தின் ஆலயம் என தெரிவித்துள்ள அவர் ஜோ பைடனிடம் அதிகாரத்தை அமைதியான முறையில் அமெரிக்கா வழங்கும் என எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.



அமெரிக்க நாடளுமன்றத்தில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களை ஜனநாயகத்தின் எதிரிகள் வரவேற்பார்கள் என ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் ஹெய்க்கோ மாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள்

# கல்லுண்டாய் புதிய குடியிருப்பில் தரம் 6க்கு மேல் கற்கும் மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கப்பெற்றன











60,000 நிதி அன்பளிப்பின் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்லுண்டாய் புதிய குடியிருப்பைச் சேர்ந்த தரம் 6க்கு மேல் கல்வி கற்று வரும் மாணவர்களுக்கு புத்தகப்பைகளை தந்துதவுமாறு கிராம மக்களினால் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக வட்டு இந்து வாலிபர் சங்கத்திடம் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தலா ரூபா 1,200 பெறுமதியில் 50 பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கப்பெற்றன.

# வட்டு இந்து வாலிபர் சங்கம் 30 வன்னி மாணவர்களுக்கு புத்தகப்பைகளும் பாடசாலை சீருடைத்துணிகளும் வழங்கியது







கடந்த கால யுத்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட கண் பார்வை திறனை இழந்து தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வரும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமது பயனாளிகளின் பாடசாலை செல்லும் 30 பிள்ளைகளுக்கு சீருடைத் துணிகளும் புத்தகப் பைகளையும் தந்துதவுமாறு வட்டு இந்து வாலிபர் சங்கத்திடம் வன்னி விழிப்புலனற்றோர் அமைப்பினால் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இன்றைய தினம் ரூபா 64, 245 பெறுமதியில் 30 மாணவர்களுக்கு புத்தகப்பைகளும் பாடசாலை சீருடைத்துணிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.



இந்திய செய்திகள்

# 2021 பிறந்தவுடன் இலங்கைக்கு ஓடோடிச் சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெயசங்கர்

2021 புத்தாண்டு பிறந்தவுடன் மிகுந்த ஆர்வத்துடன் இலங்கைக்கு ஓடோடிச் சென்றுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெயசங்கர் அங்கு என்ன விடயங்களை பேசப்போகின்றார் என்பதை தமிழர் தரப்பு எதிர்பார்த்து காத்திருப்பதாக கொழும்பிலிருந்து கிடைத்த செய்தியொன்று தெரிவிக்கின்றது.





இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்த பயணத்தின் மூலம் இந்திய அமைச்சர் ஒருவர் அல்லது வெளிநாட்டு அரசியல் தலைவர் ஒருவர் புத்தாண்டு பிறந்து இலங்கைக்கு பயணித்த முதலாமவர் என்ற பெருமையை எஸ். ஜெயசங்கர் பெறுகின்றார் என்று எமது கொழும்புச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இந்திய விமானப் படையின் விசேட விமானம் மூலம் கொழும்பைச் சென்றடைந்த அவரை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் தார பாலசூரிய மற்றும் இலங்கை வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோர் வரவேற்றனர்.

இதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெயசங்கரின் இந்த உத்தியோகபூர்வ விஜயமானது, இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் அழைப்பின் பேரிலேயே இடம்பெற்றது என்று கூறப்பட்டாலும், இந்தியத் தரப்பும் குறிப்பாக இந்திய பிரதமர் மோடி அவர்களும் இதனை விரும்பியதாகவும், எனவே அதனை ஏற்று இலங்கைக்கு இரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளதாவும் கூறப்படுகின்றது அவர், நாளை மறுதினம் 7ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பாரென இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இக்காலப் பகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட தலைவர்களையும், வர்த்தக தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக, இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# டெல்லியில் இஸ்லாமியர்கள் தொழுகை செய்வதற்கு சீக்கியர்கள் பாதுகாப்பாக நின்ற அற்புதம் காணீர்!




இந்தியாவின் டெல்லி சிங்கு எல்லையில் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்துப் போராடும் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து பல பகுதிகளில் இருந்து வந்து கலந்து கொள்ளும் மக்கள் நடத்தும் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ள இஸ்லாமிய சகோதரர்கள் கடந்த வெள்ளியன்று தொழுகை செய்வதற்கு சீக்கிய சகோதரர்கள் பாதுகாப்பு வளையம் அமைத்து நின்றது சகோதரத்துவத்தின் அற்புதத்தை வெளிப்படுத்தியது.

மோடியானவர், தனது பதவியை விட்டு “துண்டைக் காணோம் துணியைக் காணோம்” என்று ஓடச் செய்கின்ற ஒரு போராட்டமாக இது அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற இந்தக் களம், வீரத்தையும், அன்பையும், கருணையையும், சகோதரத்துவத்தையும் ஒருசேரக் கற்றுத்தருகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# 51வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் போட்டியிடும் திரைப்படங்கள் அறிவிப்பு



51-வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் சர்வதேச போட்டியில் பங்குபெறும் திரைப்படங்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் பிரிவில் போட்டியிடுவதற்காக உலகெங்கிலும் இருந்து திரைப்படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. வருடத்தின் சிறந்த திரைப்படங்கள் பங்குபெறும் இத்திருவிழாவின் முக்கிய பிரிவுகளில் ஒன்றான இதில், தங்க மயில் மற்றும் இதர விருதுகளுக்காக 15 திரைப்படங்கள் போட்டியிடுகின்றன.

வரிசையில் இடம்பெற்றுள்ள திரைப்படங்கள் வருமாறு:

1. டியாகோ குயிட்ஸின் தி டொமைன் (போர்ச்சுகல்)
2. ஆண்டெர்ஸ் ரெ.ஃப்னின் இன்டு தி டார்க்னெஸ் (டென்மார்க்)
3. காமென் காலெவ்வின் பிப்ரவரி (பல்கேரியா, பிரான்ஸ்)
4. நிக்கோலஸ் மவுரியின் மை பெஸ்ட் பார்ட் (பிரான்ஸ்)
5. பியாட்ர் டோமாலெவ்ஸ்கியின் ஐ நெவர் க்ரை (போலாந்து, அயர்லாந்து)
6. லியார்னடோ மெடெல்லின் லா வெரோனிகா (சிலி)
7. ஷின் சு-வொன்னின் லைட் ஃபார் தி யூத் (தென் கொரியா)
8. லோயிஸ் பாட்டினோவின் ரெட் மூன் டைட் (ஸ்பெயின்)
9. அலி காவித்தானின் ட்ரீம் அபவுட் சோஹ்ரப் (ஈரான்)
10. ரமின் ரசவுலியின் தி டாக்ஸ் டிடின்ட் ஸ்லீப் லாஸ்ட் நைட் (ஆஃப்கானிஸ்தான், ஈரான்)
11. கோ சென்-நியென்னின் தி சைலண்ட் ஃபாரஸ்ட் (தாய்வான்)
12. டாரிய ஒனிஷ்சென்கோவின் தி ஃபர்காட்டென் (உக்ரேன், ஸ்விட்சர்லாந்து)
13. கிரிபால் கலித்தாவின் பிரிட்ஜ் (இந்தியா)
14. சித்தார்த் திரிபாதியின் ஏ டாக் அண்ட் ஹிஸ் மேன் (இந்தியா)
15. கணேஷ் விநாயகனின் தாயென் (இந்தியா)

கீழ்கண்ட பல்வேறு பிரிவுகளில் விருதுகளுக்காக இந்த திரைப்படங்கள் போட்டியிடும்:

1. சிறந்த திரைப்படம் (தங்க மயில்) - ரூ 40,00,000 பரிசுத்தொகையை இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும். பரிசுத் தொகையை தவிர, தங்க மயிலும், சான்றிதழும் இயக்குநருக்கு கிடைக்கும். தயாரிப்பாளருக்கு பரிசுத் தொகையை தவிர சான்றிதழ் கிடைக்கும்.
2. சிறந்த இயக்குநர்: வெள்ளி மயில், சான்றிதழ், ரூ 15 லட்சம் பரிசுத் தொகை.
3. சிறந்த நடிகர்: வெள்ளி மயில், சான்றிதழ், ரூ 10 லட்சம் பரிசுத் தொகை.
4. சிறந்த நடிகை: வெள்ளி மயில், சான்றிதழ், ரூ 10 லட்சம் பரிசுத் தொகை.
5. சிறப்பு நடுவர் விருது: வெள்ளி மயில், சான்றிதழ், ரூ 15 லட்சம் பரி-சுத் தொகை ஒரு திரைப்படத்திற்கோ (நடுவர்கள் பாராட்ட விரும்பும் ஏ-தேனும் ஒரு விஷயத்திற்காக), அல்லது தனிநபருக்கோ (திரைப்படத்திற்கு அவரது பங்களிப்பிற்காக) வழங்கப்படும். ஒரு வேளை திரைப்படத்திற்கு விருது வழங்கப்பட்டால், அதன் இயக்குநருக்கு அது வழங்கப்படும்.

# திரையரங்குகளில் 100 சதவிகித பார்வையாளர்களை அனுமதிப்பது கொலைக்கு நிகரானது என்கிறார் சென்னை மருத்துவர்



சென்னை: தியேட்டர்களில் 100 சதவீத பார்வையாளர்களை அனுமதிப்பது தற்கொலை முயற்சி அல்ல, கொலை என்று நடிகர்கள் விஜய், சிம்புவுக்கு இளம் மருத்துவர் ஒருவர் எழுதியுள்ள கடிதம் வைரலாகி உள்ளது. கொரோனா தொற்று பரவலுக்கு தீர்வு காணப்படாத நிலையில் தியேட்டர்களில் 100 சதவீத பார்வையாளர்களுக்கு அனுமதி அளித்துள்ளது தொடர்பாக டாக்டர் ஒருவர் நடிகர்கள் விஜய், சிம்புக்கு கடிதம் எழுதி உள்ளார். அவரின் பெயர் டாக்டர் அரவிந்த் ஸ்ரீனிவாஸ். பேஸ்புக் பக்கத்தில் அவர் எழுதி உள்ள கடிதம் சமூகவலை தளங்களில் வைரலாகியுள்ளது. அதன் விவரம் வருமாறு:

டியர் விஜய் சார், சிலம்பரசன் சார் மற்றும் மரியாதைக்குரிய தமிழக அரசுக்கு. நான் சோர்வாக இருக்கிறேன். நாங்கள் அனைவரும் சோர்வாகவே உள்ளோம். என்னை போன்ற ஆயிரக்கணக்கான டாக்டர்கள் சோர்வாக இருக்கின்றனர். சுகாதாரத் துறை ஊழியர்கள் சோர்வாக உள்ளனர். போலீஸ் அதிகாரிகள் சோர்வாக இருக்கிறார்கள். தூய்மை பணியாளர்கள் சோர்வாக உள்ளனர். கொரோனா தொற்றுக் காலத்தில் நாங்கள் அனைவரும் கடுமையாக வேலை செய்து கொண்டிருக்கிறோம். எங்கள் வேலையை பெருமைப்படுத்தி சொல்லவில்லை. பார்ப்பவர்களுக்கு அது பெரிய வி'யமாகவும் தெரிய வில்லை. எங்களுக்கு முன்பு கேமராக்கள் இல்லை. நாங்கள் ஸ்டண்ட் காட்சிகளில் நடிப்பது இல்லை. நாங்கள் ஹீரோக்கள் இல்லை. ஆனால் எங்களுக்கும் மூச்சு விட நேரம் வேண்டும். சிலரின் சுயநலம் மற்றும் பேராசைக்காக நாங்கள் பலிகடா ஆக விரும்பவில்லை.

தொற்றுநோய் இன்னமும் முடியவில்லை. இந்த நோயால் இன்னும் மக்கள் இறக்கிறார்கள். தியேட்டர்களில் 100 சதவீத பார்வையாளர்களை அனுமதிப்பது என்பது தற்கொலை முயற்சி இல்லை கொலை. கொள்கையை வகுப்பவர்களோ ஹீரோக்களோ மக்கள் கூட்டத்துடன் சேர்ந்து படம் பார்க்கப் போவது இல்லை. பணத்திற்காக வாழ்க்கையை வர்த்தகம் செய்தல் போன்று இது ஒரு அப்பட்டமான பண்டமாற்று முறை. உயிருக்கு பணத்தை வியாபாரம் செய்கிறார்கள். நாம் நம் வாழ்க்கையில் கவனம் செலுத்தி, இந்த தொற்று நோய் காலத்தில் இருந்து வெற்றிகரமாக மீண்டு வர முயற்சிக்கலாமே? மெதுவாக அணையும் தீயை மீண்டும் தூண்டிவிட வேண்டாமே, அது இன்னும் முழுதாக அணையவில்லை. நாம் ஏன் இன்னும் ஆபத்தில் இருக்கிறோம் என்பதை அறிவியல் ரீதியாக விளக்க நினைத்தேன். ஆனால் என்ன பயன் என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன் என்று அரவிந்த் அந்த கடிதத்தில் தெரிவித்து உள்ளார்.

# ஜெனிவா தொடர்பில் தமிழ்த்தரப்பில் காணப்படும் மூன்று நிலைப்பாடுகள்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

இம்முறை ஜெனிவாவை எப்படிக் கையாள வேண்டும் என்பது தொடர்பில் தமிழ்த் தரப்பில் மூன்று நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. முதலாவதாக ஒரு வார்த்தைப் பிரயோகம் குறித்து கொஞ்சம் தெளிவாக பார்க்க வேண்டும். இங்கு கையாளுதல் என்ற வார்த்தை பொருத்தமானதா? தமிழ்த் தரப்பினால் ஜெனிவாவைக் கையாள முடியுமா? ஏனென்றால் அது அரசுகளின் அரங்கம். அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்களுக்கு அங்கே உத்தியோகபூர்வமாக இடம் இல்லை. எனினும் ஓர நிகழ்வுகளிலும் நிழல் அறிக்கைகளிலும் தனிப்பட்ட சந்திப்புகளின்போதும் அவர்கள் தமது கருத்துக்களை உருவாக்கலாம். அதைத்தான் கடந்த 6 ஆண்டுகளாக தமிழ் தரப்பு செய்துவருகிறது. ஜெனீவாவை ஏற்றுக்கொண்ட தரப்புக்களும்சரி ஏற்றுக் கொள்ளாத தரப்புக்களும்சரி கடந்த ஆறு ஆண்டுகளாக ஜெனிவாவை நோக்கி செல்கின்றன. அங்கு போய் ஏதோ ஒரு விகிதமளவுக்கு அரசுகளின் மத்தியில் கருத்துருவாக்கத்தைச் செய்ய முயற்சித்து வருகின்றன.

அரசுகளின் அரங்கான ஜெனிவாவில் அரசற்ற தமிழ் மக்களின் குரல் எப்பொழுது உற்றுக் கேட்கப்படும்? எப்பொழுது என்றால் அரசுகளால் இலங்கை அரசாங்கத்தை வெற்றிகரமாகக் கையாள முடியாத போது ஓர் அழுத்தப் பிரயோகக் கருவியாக அவர்கள் தமிழ் தரப்பை அணுகுவார்கள் கையாளுவார்கள். இப்படிப் பார்த்தால் இம்முறை அவ்வாறு தமிழ் தரப்பை மேற்கு நாடுகள் அணுக வேண்டிய ஒரு புவிசார் அரசியல் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக கோவிட்-19க்குப் பின்னரான உலகச் சூழலானது சீனா எதிர் அமெரிக்கா என்ற விதமாக அதிகரித்த அளவில் துருவமயப்பட்டிருப்பதும் இதற்கு ஒரு காரணம். இந்த அடிப்படையில் பார்த்தால் இம்முறை ஜெனிவாவில் தமிழ் தரப்பை ஏதோ ஒரு விகிதமளவுக்குக் கவனத்தில் எடுக்க வேண்டிய தேவை அரசுகளுக்கு உண்டு. அதற்காகத் தமிழ்த் தரப்பின் கோரிக்கைகளை இணை அனுசரணை நாடுகள் தீர்மானமாக மாற்றி விடும் என்றெல்லாம் அம்புலிமாமாக் கதைப் பாணியிலான கற்பனைகளுக்கு இடமில்லை.

ஜெனீவாவில் இறுதி முடிவை அரசுகளே எடுக்கும். அவை அரசுக்கும் அரசுக்கும் இடையிலான பாதுகாப்பு வர்த்தகம் போன்ற நிலையான உறவுகளின் அடிப்படையில் அந்த முடிவுகளை எடுக்கும். ஜெனிவாவைப் பொறுத்தவரை இலங்கை விவகாரங்களைக் கையாள்வதற்காக இணைக் குழு நாடுகள் என்ற நாடுகளின் கட்டமைப்பு செயற்பட்டு வருகிறது. கனடா, பிரித்தானியா, மசிடோனியா, மொன்றினிக்ரோ, ஜேர்மனி ஆகிய நாடுகளே அக்கட்டமைப்புக்குள் அடங்குகின்றன. பிரித்தானியா இக் கட்டமைப்புக்குள் முதன்மை வகிக்கிறது. ஜெனீவாத் தீர்மானத்தை இறுதியாகுவது இந்த நாடுகள்தான்.

சரி இனி தமிழ் தரப்பில் ஏன் மூன்று நிலைப்பாடுகள் காணப்படுகின்றன என்று பார்க்கலாம். இம்முறை தமிழ்த் தரப்பு மூன்று தரப்புகளாக நிற்கிறது. அதிகம் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டமைப்பு. அடுத்தது தமிழ் தேசிய மக்கள் முன்னணி. அடுத்தது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி. இவ்வாறு மூன்று தரப்புக்கள் ஏற்படக் காரணம் மாற்று அணி இம்முறை பெற்ற வெற்றிகள்தான். அதனால் கூட்டமைப்பின் ஏகபோகம் ஒப்பீட்டளவில் குறைக்கப்பட்டுள்ளது. எனவே இம்முறை தமிழ்த் தரப்பு எனப்படுவது இம்மூன்று தரப்புகளையும் உள்ளடக்கியதுதான். இந்த யதார்த்தத்தை முன்வைத்து புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் சில ஜெனிவாவை எதிர்கொள்வதற்காக இம்மூன்று தரப்புகளையும் ஒருங்கிணைக்கும் விதத்தில் சில முன்மொழிவுகளை அனுப்பி வைத்தன. எனினும் இது விடயத்தில் இன்று வரையிலும் ஒரு பொதுக்கருத்து எட்டப்படவில்லை.

சரி அடுத்ததாக அந்த மூன்று நிலைப்பாடுகளும் என்ன என்று பார்க்கலாம். முதலாவது - கூட்டமைப்பினுடையது. கடந்த ஆறு ஆண்டுகளாக ஜெனிவாவை அதிகம் உத்தியோகபூர்வமாகக் கையாண்டு வந்தது அக்கட்சிதான். கடந்த ஆறு ஆண்டுகளாக இணையனுசரணை நாடுகளின் மத்தியில் தமிழ்த் தரப்பாக நின்று ஏதோ ஒரு விகிதமளவுக்கு கருத்துருவாக்கத்தைச் செய்தது கூட்டமைப்புத்தான். அதன் விளைவாக ஏற்பட்டதே 30/1 ஐநாத் தீர்மானம். அது நிலைமாறுகால நீதிக்கானது. நிலைமாறுகால நீதி எனப்படுவது நடைமுறையில் பொறுப்புக்கூறல்தான். எனவே கடந்த ஆறு ஆண்டுகளாக ஐநாவில் பொறுப்புக்கூறும் ஒரு பொறிமுறைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏதோ ஒரு விகிதமளவுக்கு ஒத்துழைப்பை வழங்கியிருக்கிறது.

ஆனால் இப்பொழுது பொறுப்புக்கூறலுகான அதாவது நிலைமாறுகால நீதிக்கான ஐநாவின் செயற்பாடுகள் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை என்பதை அக்கட்சி ஏற்றுக்கொள்கிறது. இது விடயத்தில் அரசாங்கத்துக்கும் அனைத்துலக சமூகத்துக்கும் தாம் ஒரு வாய்ப்பை வழங்கியிருந்த போதிலும் கடந்த ஆறு ஆண்டுகளாக தமிழ்மக்கள் திருப்திப்படக்கூடிய ஒரு பொருத்தமான விளைவு இன்று வரையிலும் ஏற்படவில்லை என்று அக்கட்சி கருதுகிறது. எனவே இது விடயத்தில் அரசாங்கத்தை மேலும் இறுக்கிப் பிடிக்கும் விதத்தில் ஜெனிவா தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று அக்கட்சி கருதுவதாக தெரிகிறது. எனினும் ஜெனிவாவைக் கடந்து எனைய அரங்குகளுக்குப் போவது தொடர்பில் அக்கட்சியிடம் இலட்சியப் பற்றுமிக்க பார்வைகள் இருப்பதாக தெரியவில்லை.

அக்கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் ஜெனிவாவை கடந்து போக வேண்டும் என்றும் அனைத்துலக நீதிமன்றங்களை நோக்கி போக வேண்டும் என்றும் கூறிக்கொண்டாலும் கூட அதற்கு அடிப்படையான வரையறைகள் உண்டு என்றும் கூறிவருகிறார். ஜெனிவாவுக்குள் மட்டும் நிற்பதனால் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்பதனையும் அவர் ஆங்காங்கே ஏற்றுக்கொள்கிறார். ஆனால் ஜெனிவாவை விட்டு வெளியேறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் இந்த விவகாரத்தை ஐநாவின் ஏனைய அரங்குகளுக்கும் அனைத்துலக நீதிமன்றங்களுக்கும் எப்படி கொண்டு போகலாம் என்பது குறித்தும் அக்கட்சி விசுவாசமாக செயற்படுவதாகவும் தெரியவில்லை. எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஜெனிவாவை ஏதோ ஒரு விதத்தில் என்கேஜ் பண்ணவேண்டும் என்று அக்கட்சி சிந்திப்பதாக தெரிகிறது.

அதேசமயம் அக்கட்சிக்கு உள்ளேயே வேறு நிலைப்பாடுகள் இருப்பதாக தெரிகிறது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாக உள்ள டெலோ இயக்கம் புளொட் இயக்கம் போன்றன தமிழரசுக்கட்சியின் ஆதிக்கத்தை விரும்பவில்லை என்று தெரிகிறது. தவிர இப்பொழுது தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பூசல்கள் காரணமாக மாவை சேனாதிராஜா அணி சுமந்திரனின் நிலைப்பாட்டை முழு அளவுக்கு ஏற்றுக் கொள்வதாக தெரியவில்லை. எனவே இது விடயத்தில் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவமும் பல துருவப்பட்டு நிற்கிறது. இது முதலாவது.

இரண்டாவது நிலைப்பாடு - விக்னேஸ்வரன். அவரும் ஜெனிவாவுக்கு வெளியே போகவேண்டும் என்றுதான் கேட்கிறார். குறிப்பாக அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் அனைத்துலக நீதிமன்றம் சிறப்புத் தீர்ப்பாயங்கள் போன்றவற்றை நோக்கிப் போகவேண்டும் என்று அவரும் நம்புகிறார். ஆனாலும் ஜெனிவாவை ஒரேயடியாக முறித்துக் கொண்டு வெளியேற வேண்டும் என்று அவர் சிந்திப்பதாக தெரியவில்லை. அவருடைய கட்சிக் கூட்டுக்குள் அங்கம் வகிக்கும் சிவாஜிலிங்கம் கூறுகிறார் யாரையாவது உதைப்பது என்றால் ஒரு காலை ஊன்ற வேண்டும், இரண்டு கால்களாலும் உதைய முடியாது எனவே ஜெனிவாவில் காலை ஊன்றி அடுத்த கட்டத்துக்குப் பாய வேண்டும் என்று.



மூன்றாவது நிலைப்பாடு கஜேந்திரகுமாருடையது. அவருடைய கட்சி ஜெனிவாவுக்குள்ளிருந்து பொறுப்புக்கூறும் பொறிமுறையை வெளியே எடுக்க வேண்டும் என்று கேட்கின்றது. அடுத்த கட்டமாக அனைத்துலக நீதிமன்றங்கள் சிறப்புத் தீர்ப்பாயங்களிடம் சென்று நீதி கேட்க வேண்டும் என்றும் அக்கட்சி கூறுகிறது. இந்த விடயத்தை அக்கட்சி இப்போதுதான் கூறுகிறது என்பதல்ல. பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக கூறிவருகிறது. எனவே ஜெனிவாவிற்குள் தொடர்ந்தும் பெட்டி கட்டப்பட்டிருப்பதை அக்கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் ஜெனிவாவில் தொடர்ந்தும் என்கேஜ் பண்ணுவதில் பயனில்லை என்று அக்கட்சி கூறுகிறது. அப்படியென்றால் ஜெனிவா தீர்மானங்களை அக்கட்சி ஏற்கவில்லை என்பதுதான் அதன் சாராம்சம்.

மேற்கண்ட மூன்று நிலைப்பாடுகளையும் தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. மூன்று கட்சிகளுமே ஜெனிவா போதாது ஜெனிவாவை கடக்க வேண்டும் என்று கூறுகின்றன. ஆனால் விகித வேறுபாடு உண்டு. இது விடயத்தில் கூட்டமைப்பு இணைக குழு நாடுகளின் அபிப்பிராயங்களை அதிகம் மதிக்க வேண்டும் என்று கருதுகிறது. இணைக குழு நாடுகளை புறந்தள்ளிவிட்டு அரசியல் செய்ய முடியாது என்றும் நம்புவதாக தெரிகிறது. எனவே உலக யதார்த்த தோடு ஏதோ ஒரு விகிதம் அளவுக்கு சுதாகரித்துக் கொள்ள அக்கட்சி திட்டமிடுகிறது. விக்னேஸ்வரனின் தரப்பு ஒரு நடுவழியைக் கடைப்பிடிக்கிறது. கஜேந்திரகுமாரின் அணி ஜெனிவாவைக் கடந்து போக வேண்டும் என்று இறுக்கமான நிலைப்பாட்டோடு காணப்படுகிறது.

இதுவிவகாரத்தில் புலம்பெயர்ந்த தரப்புக்கள் மத்தியிலும் வேறுபட்ட நிலைப்பாடுகளை காணமுடிகிறது. ஒருதரப்பு இணைக குழு நாடுகளோடு ஏதோ ஒரு விகிதமளவுக்கு சுதாகரிக்கக் கேட்கின்றது. வேறு சில தரப்புக்கள் ஜெனிவாவை நிராகரிப்பதாக தெரிகிறது. அனைத்துலக நீதிமன்றங்களை நோக்கியும் அனைத்துலக நீதிமன்றங்கள் விசேஷ தீர்ப்பாயங்களை நோக்கியும் போகவேண்டும் என்று அத்தரப்புக்கள் நம்புகின்றன. எனவே தொகுத்துப் பார்த்தால் தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பிலும் தமிழ்த் தரப்பு எனப்படுவது பல்வேறு நிலைப்பாடுகளோடு காணப்படுகிறது. இந்நிலைப்பாடுகள் அனைத்தையும் ஏதோ ஒரு புள்ளியில் சந்திக்க வைத்தால் மட்டுமே ஜெனிவாவை நோக்கித் தமிழ்த்தரப்பை ஒன்றிணைக்கலாம். இல்லையென்றால் இம்முறையும் தனித்தனி ஓட்டங்களுக்குக்கான வாய்ப்புக்களே அதிகமாகும். இதை இன்னும் தெளிவாக பின்வருமாறு கேட்கலாம்....தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரண்டு நிற்கிறார்கள் என்பதனை ஜெனிவாவில் வெளிக்காட்டக் கிடைத்திருக்கும் வாய்ப்பை தமிழ் தரப்புக்கள் இம்முறை எப்படிக் கையாளப் போகின்றன?

# கனடா வாழ் எழுத்தாளர் குரு அரவிந்தன் படைப்புக்கள் பற்றிய திறனாய்வுப் போட்டி

இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் 50வது ஆண்டு நிறைவான தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் நடக்கும் உலகளாவிய நாவல், சிறுகதை திறனாய்வுப் போட்டி.




பரிசு பெறும் எழுத்தாளர்களுக்காகப் 13 பரிசுகள், மொத்தம் இலங்கை நாணயம் 110,000 ரூபாய்கள். பரிசுகள் இலங்கை நாணயத்தில் வழங்கப்படும்.

**முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் - 25,000**
**இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 20,000**
**மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 15,000**
**10 பாராட்டுப் பரிசுகள் (ஒவ்வொருவருக்கும் இலங்கை ரூபாய்கள் - 5000)**
**பாராட்டுப் பரிசுகள் (10) மொத்தத்தொகை ரூ. - 50,000**

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புக்களுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 4 பக்கங்களுக்குள் அல்லது 1500 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும்.

**உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 30.04.2021**

போட்டி முடிவுகள் 2021 மே மாதம் 24 ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.
மின்னஞ்சல்: kurufanclub@gmail.com – (kurufanclub@gmail.com)
இணையம்: https://kurunovelstory.blogspot.com/ (kurunovelstory.blogspot.com)
https://canadiantamilsliterature.blogspot.com/

இந்த அறிவிப்பினை உங்களின் முகநூல் பக்கத்திலும் பகிரிக்குழுக்களிலும் பகிர்ந்து உதவுங்கள். நன்றி!

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்) -

# "இலங்கைக்கு எதிராக ஐ நா வில் முஸ்லிம் நாடுகள் முறையிட வேண்டும்"

இலங்கையில் இஸ்லாமியர்களுக்கு எதிராக இடம்பெறும் உரிமை மீறல்கள் குறித்து ஐ.நாவில் முறையிட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராகத் திட்டமிட்ட வகையில் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை இஸ்லாமிய நாடுகளின் கவனத்திற்கு உள்ளூர் முஸ்லிம் மக்களும், தலைவர்களும் கொண்டுசெல்ல வேண்டுமென்று அவர் கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் போர்க் காலத்தில் நடைபெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள் விசாரிக்கப்பட வேண்டுமென்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவுள்ளது, அதற்கு அனைத்து தமிழ் தரப்பும் ஆதரவளிக்க வேண்டும் எனவும் சாணாக்கியன் கேட்டுக் கொண்டார்.

ஐ நா மனித உரிமைகள் பேரவையில் அதற்கான முன்மொழிவை சகல தமிழ் தரப்புடன் இணைந்து முன்வைக்க கூட்டமைப்பு விரும்புகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கடந்த காலங்களில் காலஅவகாசம் கேட்டுள்ளதாக வந்த கருத்துக்கள் உண்மையில்லை என்றும் தெரிவித்த சாணாக்கியன் போர்க் காலத்தில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் எனவும் கூறினார்.

# "கொரோனா தொற்று காலத்தில் அரசியல் கைதிகளின் உயிருடன் விளையாடாதீர்கள்"

## அரசுக்கு பல்தரப்பினர் எச்சரிக்கை

இலங்கையில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி வடக்கு-கிழக்கு இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள் தொடருகின்றன. இந்த கவனயீர்ப்புப் போராட்டங்களில் மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் பங்குபற்றினர்.

குரலற்றவர்களின் குரல் எனும் அமைப்பின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கூட்டங்கள் மன்னார் தொடக்கம் முல்லைத்தீவு வரையிலும், மட்டக்களப்பு மற்றும் அப்பாறையிலும் நடைபெற்றன.

இலங்கைச் சிறைகளிலுள்ள அரசியல் கைதிகளில் 16 பேருக்கு நோய்த் தொற்று கண்டறியப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று அந்த அமைப்பு கூறுகிறது.

அவர்கள் குறித்த எந்தத் தகவல்களும் தமக்குக் கிடைக்கவில்லை என்று பாதிக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பத்தினர் கூறுவதாக அந்த அமைப்பு தெரிவிக்கிறது.

யாழ்ப்பாண சட்டத்தரணியான கனகரட்னம் சுகாஸ், "அரசியல் கைதிகளின் உயிருடன் அரசு விளையாடுகிறது" என்று எச்சரித்துள்ளார். கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட ஊட்டச்சத்து உணவு அந்தக் கைதிகளுக்கு கிடைக்கவில்லை, அது அவர்களின் உடல் நிலையில் பாரியத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறினார் சுகாஸ்.

குறிப்பாக 300 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரகுபதி சர்மாவின் உடல் நிலை 10 கிலோ குறைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டிய சுகாஸ் இதுபோன்று பலரது உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது என்றார்.

இக்கூட்டத்தில் வட மாகாண சபையின் முன்னாள் முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உட்பட பலர் பங்குபற்றினர்.

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்



Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400

| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced
Credit Counsellor



# கொரோனா ஆண்டு (2020) முடிந்து தடுப்பூசி ஆண்டு (2021) பிறந்தது





ஒட்டு மொத்த உலக நாடுகளுக்கும் எதிரான "மூன்றாம் உலகப்போர்" என வர்ணிக்கப்பட்ட கோவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் பெருந்தொற்றுப்பரவலுக்கு முடிவுரை எழுதும் பணிகள் தொடங்கி விட்டன. ஆம் கொரோனா ஆண்டு (2020) முடிந்து விட்டது. இப்போது தொடங்கியிருப்பது, தடுப்பூசி ஆண்டு (2021).

உலகின் முதல் நாடாக ரஷியா தனது "ஸ்புட்னிக்-வி" தடுப்பூசியை தலைநகர் மாஸ்கோ மக்களுக்கு செலுத்தும் பணியை தொடங்கியது. அடுத்து, இங்கிலாந்தும், அதன்பிறகு அமெரிக்காவும் "பைசர்" தடுப்பூசியை பொதுமக்களுக்கு செலுத்தத்தொடங்கின. இப்போது, ஐரோப்பிய நாடுகள், அரபு நாடுகள் பலவும் தடுப்பூசி போடும் பணியைத்தொடங்கி விட்டன.

தடுப்பூசியால் ஒரு சிலருக்கு பக்கவிளைவுகள், கொரோனா வைரசின் திரிபு வடிவ (Mutation) பரவல், தடுப்பூசிக்கு எதிரான தவறான பிரசாரம் என தினம் செய்திகள் வந்து கொண்டு இருக்கும் நிலையில், நம்பிக்கையுடன் தடுப்பூசி போட்டுக் கொள்வோரின் எண்ணிக்கை கூடிக்கொண்டு வருகிறது. இந்தியாவில், கீழ்க்கண்ட 3 நிறுவனங்கள் தடுப்பூசியின் இறுதிக்கட்ட பரிசோதனையை நிறைவு செய்து, அவசர கால பயன்பாட்டுக்கான அனுமதியை கோரியுள்ளன:

கோவிஷீல்டுக்கு பரிந்துரை

1) கோவிஷீல்டு, இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகமும், அஸ்ட்ராஜென்கா நிறுவனமும் இணைந்து கண்டுபிடித்த இந்தத் தடுப்பு மருந்தை, இந்தியாவில் பரிசோதித்து உற்பத்தி செய்யும் உரிமையை, புனாவில் உள்ள சீரம் இன்ஸ்டிடியூட் பெற்றுள்ளது.

2) கோவாக்சின், ஐதராபாத் பாரத் பயோடெக் நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலுடன் இணைந்து இதைத் தயாரித்துள்ளது.

3) பைசர், அமெரிக்காவின் பைசர் நிறுவனமும், ஜெர்மனியின் பயோ என்டெக் நிறுவனமும் இணைந்து கண்டுபிடித்த இந்த தடுப்பு மருந்து தான் இப்போது அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் மிகத்தீவிரமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலும் இதைப் பயன்படுத்த அனுமதி கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட மூன்றில், கோவிஷீல்டு தடுப்பூசியை பயன்படுத்தலாம் என்று, இந்திய மருந்துக்கட்டுப்பாட்டு அமைப்புக்கு மருத்துவ வல்லுநர் குழு பரிந்துரை வழங்கியுள்ளது. கோவிஷீல்டின் செயல்திறன் 95 சதவீத அளவுக்கு உள்ளதாக, பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரையை ஏற்று, கோவிஷீல்டு பயன்பாட்டுக்கு இன்னும் சில நாட்களில் மருந்துக் கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதி கிடைத்ததும், தடுப்பூசி செலுத்தும் பணிகள் தொடங்கி விடும். இதற்கு ஏற்ப, பரிசோதனை நிலையின்போதே உற்பத்தியையும் சீரம் நிறுவனம் தொடங்கி விட்டது.

இதற்கிடையே, யார்-யாருக்கு முதலில் தடுப்பூசி வழங்க வேண்டும் என்ற பட்டியல்களை, மத்திய அரசின் அறிவுரைப்படி மாநிலங்கள் தயாரித்து வைத்துள்ளன. அதன்படி, "முன்களப் பணியாளர்கள்" எனப்படும் டாக்டர்கள், நர்சுகள், சுகாதாரப்பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோர், முதல் கட்டமாக தடுப்பூசி போட்டுக் கொள்வார்கள்.

தமிழகத்தில் 17 இடங்களில் தடுப்பூசி ஒத்திகை

இந்நிலையில் தடுப்பூசி ஒத்திகையும் இந்தியாவில் தொடங்கி விட்டது. ஒத்திகை என்றால் யாருக்கும் தடுப்பூசி போடுவது அல்ல் தடுப்பூசிகளை எப்படி கையாள்வது, எப்படி பாதுகாப்பாக பராமரிப்பது, தடுப்பூசி போட வருபவர்களின் பெயர்களை பதிவு செய்து அவர்களை தனிநபர் இடைவெளியுடன் எப்படி அமர வைப்பது என்பன போன்ற பணிகள் பற்றி சுகாதாரப் பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. அதாவது தேர்தலின் போது, வாக்குப்பதிவுக்கு முன், தேர்தல் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குவது போன்ற நடைமுறை தான் இந்த ஒத்திகையும்.

தமிழ்நாட்டில் இன்று (ஜன. 2) முதல் 5 மாவட்டங்களில் 17 இடங்களில் தடுப்பூசி ஒத்திகை நடைபெறும் என்று, சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் அறிவித்து இருந்தார். தடுப்பூசி போடுவதற்காக 47 ஆயிரத்து 200 மையங்கள் தயாராகி வருவதாகவும், 2 மணி நேரத்தில் 25 பேருக்கு தடுப்பூசி போட முடிவெடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, தடுப்பூசி ஒத்திகை முகாம்கள் சென்னை, திருவள்ளூர், கோவை, நீலகிரி, நெல்லை ஆகிய 5 மாவட்டங்களில் 17 இடங்களில் இன்று காலை 9 மணிக்குத் தொடங்கின.

சென்னையில் ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை, ஈக்காட்டுத்தாங்கல், சாந்தோம் சுகாதார நிலையங்கள், பூந்தமல்லி அரசு மருத்துவமனை, நேமம் சுகாதார நிலையம் ஆகிய முகாம்களில் தடுப்பூசி ஒத்திகை நடைபெற்றது.

நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் அரசு மருத்துவமனை, உதகை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, நெல்லக்கோட்டை சுகாதார நிலையம் ஆகிய முகாம்களில் தடுப்பூசி பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொருத்தவரை, நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ரெட்டியார்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம், சமாதானபுரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய இடங்களில் தடுப்பூசி ஒத்திகை காலை 9 மணிக்குத் தொடங்கி பிற்பகல் வரை நடைபெற்றது. மருத்துவ அலுவலர் மேற்பார்வையில் சுகாதாரப்பணியாளர்கள் பங்கேற்று பயிற்சி பெற்றனர்.

சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் தடுப்பூசி ஒத்திகையை ஆய்வுசெய்தபின் சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

"தமிழ்நாட்டில் முதல் கட்டமாக 6 லட்சம் முன்களப்பணியாளர்களுக்கு தடுப்பூசி போடப்படும். தடுப்பூசி போட்டதற்கான குறுஞ்செய்தி அவரவர் செல்போன்களுக்கு அனுப்பப்படும். தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களின் உடலில் ஏதேனும் மாற்றம் உள்ளதா என்பது கண்காணிக்கப்படும். தலைசுற்றல் உள்ளிட்டவை ஏற்பட்டால் அவர்களுக்கு தருவதற்கு மருந்துகள் தயாராக உள்ளன. ஆனால், அப்படி எதுவும் நடக்காது. 0.1 சதவீதம் கூட தவறு நடக்கக்கூடாது என்பதற்காக அனைத்தையும் தயார்நிலையில் வைத்திருக்கிறோம்". இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அனைவருக்கும் தடுப்பூசி இலவசம்

இதற்கிடையே, இந்தியாவில் இதுவரை 5 கோடி டோஸ் அளவுக்கு தடுப்பு மருந்து உற்பத்தி செய்யப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு வாரிய அனுமதி கிடைத்தவுடன் அதை பொதுமக்களுக்கு வழங்குவதற்கான முன்னேற்பாடுகள் துரிதகதியில் நடந்து வருகின்றன.

சீரம் நிறுவனம் ஒரு டோஸ் தடுப்பூசியின் விலை ரூ.250 என நிர்ணயித்துள்ளது. முதல் 10 கோடி பேருக்கு அதை வழங்கும் செலவை "பிஎம் கேர்ஸ்" இப்போதைக்கு ஏற்றுள்ளது. தொடர்ந்து அடுத்தடுத்த டோஸ்களுக்கான செலவுகளையும் அரசாங்கமே ஏற்க உள்ளது. இதை உறுதிப்படுத்தும் விதத்தில் "இந்தியாவில் அனைவருக்கும் தடுப்பூசி இலவசமாகவே போடப்படும்" என்று மத்திய சுகாதாரத்துறை மந்திரி ஹர்ஷ்வர்தன் இன்று அறிவிப்பு வெளியிட்டார்.



மொத்தத்தில் 2020 முழுக்க முழுக்க கொரோனா ஆண்டாக நீண்டு, 2021 தடுப்பூசி ஆண்டாகப்பிறந்துள்ளது. அனைவருக்கும் தடுப்பூசி கிடைத்து, கொரோனாவை விரட்டியடிக்கும் ஆண்டாக 2021 அமையும் என உலகமே பெரும் நம்பிக்கையில் உள்ளது.

**- மணிராஜ் (திருநெல்வேலி)**

# "போர்க் குற்றச்சாட்டுக்கு ஆளானவரை" தூதராக ஏற்க வேண்டாம்: கனடிய அரசுக்கு தமிழ் அமைப்பு வலியுறுத்தல்

***சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)***



போர்க் குற்றச்சாட்டுக்கு ஆளான நபரை தமது நாட்டுக்கான இலங்கைத் தூதராக ஏற்க வேண்டாம் என்று உள்ளூர் செயற்பாட்டுக் குழுவொன்று கனடியப் பிரதமரை வலியுறுத்தியுள்ளது.

இலங்கை விமானப் படையின் முன்னாள் தலைவர் எயர் சீப் மார்ஷல் சுமங்கல டயஸை "ஏற்புடையவர் அல்ல" என்று அறிவித்து அவரது நியமனத்தை மறுக்க தமிழ் உரிமைகள் குழு கனடிய அரசுக்கு அழுத்தம் கொடுத்து கடிதம் எழுதியுள்ளது.

போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்படும் எயர் சீப் மார்'ல் சுமங்கல டயஸை கனடா அரசு "விரும்பத்தாக நபராக" அறிவித்து தூதராக தமது நாட்டுக்கு வருவதற்கு அனுமதி மறுக்க வேண்டும் என்று அந்தக் குழு கோரியுள்ளது.

எயர் மார்'ல் டயஸ் போர்க் குற்றங்கள் இழைத்ததற்கான ஆதாரங்கள் ஆணித்தரமாக தம்மிடம் இருப்பதாக தமிழ் உரிமைக் குழு கூறுகிறது, அதுமட்டுமின்றி "காமன்வெல்த் கோட்பாடுகளை" மீறினார் என்றும் அவர் மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது.

"கனடிய அரசு எயர் மார்ஷல் டயஸ் வருவதை விரும்பவில்லை, அவர் எமக்கு ஏற்புடையவரல்ல எனும் செய்தியை இலங்கை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று அந்தக் குழு கோருகிறது. மேலும் அவர் மீது மேலதிகமாக விசாரணை ஒன்றைத் தொடங்க வேண்டும், எதிர்காலத்தில் அவர் மீது தடை விதிக்கும் நடவடிக்கை தேவையா என்பதை ஆராய வேண்டும் என்றும் அந்தக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.



இதற்கு முன்னரும் இலங்கையின் இராணுவ மற்றும் கடற்படைத் தலைவர்கள் இப்படியான தர்மசங்கடத்திற்கு ஆளாகியிருந்தாலும், விமானப் படைத் தலைவர் ஒருவர் தூதராக நியமிக்கப்படுவதற்கு முதல் முறையாக இப்போது எதிர்ப்பு எழுந்துள்ளது.

இராஜாங்க உறவுகள் குறித்த வியன்னா தீர்மானத்தின்படி, எந்தவொரு நாடும் தமது நாட்டுக்கு தூதராக நியமிக்கப்படுபவரை எவ்விதக் காரணமும் கூறாமால் அந்த நபர் "விரும்பத்தகாதவர்" எனக் கூறி ஏற்க மறுக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. இலங்கையும் கனடாவும் அந்தத் தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ளன.

கனடாவின் எதிர்ப்பை இலங்கை ஏற்காமல் எயர் மார்ஷல் டயஸ் கனடா வருவாராயின் அவர் மீது போர்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் வாய்ப்புள்ளது.

அவர் மீது தமிழ் உரிமைக் குழு பல குற்றச்சாட்டுகளை வைத்துள்ளது. அவற்றுள் முக்கியமானது "செஞ்சோலைத் தாக்குதல்". அத்தாக்குதலில் குறைந்தது 53 சிறுமிகள் கொல்லப்பட்டனர், 120க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். அத்தாக்குதல் நடைபெற்ற போது அந்தப் பகுதிக்கு பொறுப்பான வான்படைத் தலைவராக அவர் இருந்தார். அந்த வளாகத்தில் சிறார்கள் இருந்திருப்பது அவருக்கு தெரிந்திருக்கலாம், இருந்தும் அடிப்படையில் சிவிலியன் இலக்கு ஒன்றின் மீது அளவுக்கு அதிகமான தாக்குதலை மேற்கொண்டார் என்று நம்புவதற்கு போதுமாக காரணங்கள் உள்ளன என்று கடந்த 2015ஆம் ஆண்டு ஐ நா மனித உரிமைகள் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இறுதிக்கட்டப் போரின் போது, போர்க் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான 57,58 மற்றும் 59ஆம் படையணியனருக்கு மூத்த அதிகாரி எனும் வகையில் காத்திரமான வான் தாக்குதல் ஆதரவளித்தர் என்றும் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இராணுவப் படையின் தலைவராக இருந்த ஜெனரல் ஜெகத் ஜயசூரிய பிரேசில் நாட்டுக்கு தூதராக நியமிக்கப்பட்ட போது, அவர் மீது பல மனித உரிமை அமைப்புகள் போர்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்தன. அவரை நாட்டிலிருந்து வெளியேற்றவும் குரல் எழுப்பப்பட்டது. ஆனால் அது தொடர்பிலான முடிவு வருவதற்கு முன்னர் அவர் நாடு திரும்பும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.


பண்பாடு · மொழி · வரலாறு
ஒன்றாரியோ
மாணவர்களை நாம்
ஆயத்தப்படுத்துகின்றோம்
அவர்கள் உலகின் பிரஜைகளாக
வருவதற்குரிய பாதையில்.
தூர இருந்து கற்றல்-வீட்டிலிருந்து கற்றல் ஆகியவை இணையவழியாக கல்விச்சபை ஊடாக வழங்கப்படுகின்றது. 2.5 மணித்தியாலங்களை, ஒரு வாரத்தில், நேரடியாக முகம் பார்த்தும் சுதந்திரமாகவும் பயிலும் சந்தர்ப்பம்
Tamil
தமிழ்
TORONTO
EDUCATION
WORKERS
தூர இருந்து கற்கும் திட்டத்திற்காக இன்றே பதிவு செய்யுங்கள்
OntarioOnlineLearning.ca

# தமிழ்மக்களுக்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகளையே மீண்டும் கொடுத்துவிட்டு நாடு திரும்பிய இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஜெயசங்கர்!

கனடா நக்கீரன்

"பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்ற பழமொழிக்கு ஒப்ப 13 ஏ போதாது அந்தத் திருத்தச் சட்டம் மேம்படுத்தப்பட்டு மத்திய அரசுக்குள்ள அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு பகிரப்பட வேண்டும் என்றும் ஏற்கனவே பகிரப்பட்ட காணி அதிகாரம், பொலீஸ் அதிகாரம் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் என்றும் தமிழர் தரப்பு நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் குரல் எழுப்பி வருகிறது. இலங்கை அரசு சமத்துவத்தின் அடிப்படையில் (equality) – நீதியின் அடிப்படையில் (justice) – கௌரவத்தின் (dignity) அடிப்படையில் – சமாதானத்தின் (peace) அடிப்படையில் ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டுமென்று வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் திரு சம்பந்தன் போன்றோர் இடித்துரைக்கிறார்கள்.

மே 19, 2009 இல் போர் முடிந்த கையோடு மே 25 இல் இலங்கைக்கு வருகை தந்த அன்றைய ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்களுக்கு இன்றைய பிரதமர் மகிந்த இராசபக்ச இனச் சிக்கலுக்குத் தீர்வாக 13 ஏ சட்ட திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என உறுதியளித்தார். பொதுச் செயலாளர் பான் கீ மூன் - சனாதிபதி மகிந்த இராசபக்ச இருவரும் மே 26 இல் விடுத்த கூட்டறிக்கையில் கூறியிருந்தார்கள்.

அனைத்து சமூகங்களின் அபிலாசைகளையும் குறைகளையும் நிவர்த்தி செய்வதும் நீடித்த அரசியல் தீர்வை நோக்கிப் பணியாற்றுவதும் நீண்டகால சமூக - பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கு அடிப்படை என்று ஜனாதிபதி இராசபக்சனவும் பொதுச்செயலாளரும் ஒப்புக்கொண்டனர். அனைத்து பிரிவுகளுக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தேசிய தீர்வு உருவாகும் என்று இலங்கை சனாதிபதி 2009 மே 19 அன்று நாடாளுமன்றத்தில் அளித்த அறிக்கையில் உள்ள உறுதிமொழியை பொதுச்செயலாளர் வரவேற்றார். 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கும், புதிய சூழ்நிலைகளில் தமிழ்க் கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் ஒரு பரந்த உரையாடலைத் தொடங்குவதற்கும் இந்த செயல்முறையை மேலும் மேம்படுத்துவதற்கும் நீடித்த அமைதி மற்றும் வளர்ச்சியைக் கொண்டுவருவதற்கும் சனாதிபதி இராசபக்ச தனது உறுதியான தீர்மானத்தை வெளிப்படுத்தினார்.

சர்வதேச மனித உரிமைகள் நியமங்களின் அடிப்படையில் மனித உரிமைகளை ஊக்குவிப்பது மற்றும் பாதுகாப்பதிலும் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளை பாதுகாப்பதிலும், தாம் உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்தது. (https://www.un.org/press/en/2009/sg2151.doc.htm)

ஆனால் இராசபக்ச ஐநா பொதுச் செயலாளர் பான் கீ மூன் அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் எதனையும் நடைமுறைப்படுத்துவதற்கு முன் வரவில்லை. "13ஏ ူ என்று தான் சொல்லியது ஒரு மேல்சபையை உருவாக்குவதற்குச் சொன்னது" என்று விளக்கம் கொடுத்தார். இன்று அவரது ஆதரவாளர்கள் மட்டுமல்ல அவரது அமைச்சரவை அமைச்சர்களே 13ஏ திருத்தத்துக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளார்கள்.

"இந்த இலங்கை - இந்திய உடன்பாடு எம்மீது திணிக்கப்பட்ட உடன்பாடு. அந்த உடன்பாட்டில் வி.புலிகளது ஆயுதங்கள் களையப்படும் என்று இந்தியா கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற இந்தியா தவறிவிட்டது. எனவே அந்த உடன்பாடு இன்று இறந்துவிட்டது. 13 ஏ திருத்தத்தையும் அரசியல் யாப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும் " என உள்ளூராட்சி மாகாண சபைகள் இராசாங்க அமைச்சரும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான கடல்படைத் தளபதி றியர் அட்மிரல் சரத் வீரசேகரா நாளும் பொழுதும் பேசி வருகிறார்.

மாகாண சபை முறைமை, 13 ஆவது திருத்தச்சட்டம், இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு எதிர்மறையான கருத்துக்களை சொல்லிவருகிறார். பொஸ்னிய நிலைமைகளை சிறிலங்காவில் உருவாக்குவதற்கு தமிழர்கள் முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். இன்னொரு அமைச்சர் "சனாதிபதி கோத்தாபய இராசபக்ச அவர்களையோ அல்லது அவர் தலைமையிலான அரசையோ வெருட்டி – மிரட்டித் தீர்வு பெற முயற்சிப்பது பயனற்றது. இதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் புரிந்துகொள்ள வேண்டும்'' என இராசபக்ச அரசின் பேச்சாளரும் முன்னாள் அமைச்சருமான கெஹலிய இரம்புக்வெல தெரிவித்துள்ளார். இலங்கை அரசை மீறி சர்வதேசம் எதையும் செய்ய முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பவுத்த தேரர்களும் 13ஏ சட்ட திருத்தத்தை அரசியல் யாப்பில் இருந்து அகற்ற வேண்டும் என ஓங்கிக் குரல் கொடுக்கிறார்கள். சிலங்கா அரசாங்க மருத்துவர் அதிகாரிகள் சங்கம் "மாகாண சபையிடம் இருக்கும் சுகாதார திணைக்களத்தை" மத்திய அரசு திருப்பி எடுக்க வேண்டும் எனக் கேட்டுள்ளது.

இந்தப் பின்னணியில்தான் இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியன் ஜெயசங்கர் இலங்கைக்கு சனவரி 05 ஆம் திகதி முதல் இலங்கை வெளியுறவு அமைச்சர் தினே' குணவர்த்தன அவர்களின் அழைப்பில் பேரில் இரண்டு நாள் அரச செலவை மேற்கொண்டு சென்றிருந்தார்.

கடந்த 10 ஆண்டுகளாக, இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனா ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது முதல், இந்தியா - இலங்கை இடையேயான உறவில் விரிசல் ஏற்படத் தொடங்கியது. இதைச் சரிப்படுத்தி இருநாட்டு உறவை மேம்படுத்தும் வகையில் ஜெய்சங்கரின் இந்த செலவு இருக்கும் என்று இந்திய வெளியுறவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

மேலும் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவது பற்றியும் மாகாண சபை முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர்கள் உட்பட சிங்கள - பவுத்த பேரினவாதிகள் ஓங்கிக் குரல் கொடுப்பது பற்றியும் வெளியுறவு அமைச்சர் சனாதிபதி கோத்தாபய இராசபக்சா அவர்களோடு பேசியிருக்கலாம்.

கடந்த சனவரி 06 ஆம் திகதி பிரதமர் இராசபக்சா "கொழும்பு கிழக்கு முனையத்தின் ஓர் அங்குலத்தைக் கூட எந்த நாட்டுக்கும் விற்க மாட்டோம்" என்று நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும் போது குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது.

பேச்சு முடிவில் இரண்டு நாடுகளும் தனித்தனியே அறிக்கை வெளியிட்டன. இந்திய வெளியுறவு அமைச்சரின் செய்திக் குறிப்பில் தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாசைகளை நிறைவு செய்வதில் இருந்து அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் உள்ளடங்கலாக இலங்கை அளித்த அதிகாரப் பகிர்வு வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் சனாதிபதி செயலக அறிக்கையில் இந்த விடயங்கள் பற்றிய குறிப்பு எதுவும் காணப்படவில்லை.

வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கர் அவர்களைத் ததேகூ இன் தலைவர்கள் திரு சம்பந்தன் தலைமையில் சந்தித்து தமிழ்மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை எடுத்துக் கூறியுள்ளார்கள். அவற்றுக்குப் பதிலளித்த வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கர் "தமிழருக்கு நியாயம் கிடைக்க வேண்டும்! அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை" எனக் கூட்டமைப்பிடம் உறுதிபடக் கூறியுள்ளார்.

"இலங்கைத் தமிழர்களுக்கு நீதி - நியாயம் கிடைக்க வேண்டும். அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கத்துடன் நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. இந்த நிலைப்பாட்டில் மாற்றம் எதையும் இந்தியா ஏற்படுத்தாது. இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இந்தியாவின் கவனம் தொடர்ந்து இருக்கும்.

ஒருமித்த நாட்டுக்குள்தான் தமிழர்கள் தீர்வு கேட்கின்றார்கள். எனவே, அவர்களின் அபிலாசைகளான நீதி, சமாதானம், சமத்துவம், கௌரவம் உள்ளடங்கலான தீர்வைப் பெற்றுக்கொடுப்பது இலங்கை அரசின் பிரதான கடமை என்பதை சனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடனான சந்திப்பில் நான் எடுத்துரைத்துள்ளேன்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதை நீங்களும் (கூட்டமைப்பும்) வலியுறுத்துங்கள். இந்திய - இலங்கை இரண்டு நாடுகளதும் இணக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசமைப்பின் 13 ஏ ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

இதை இலங்கை அரசின் கவனத்துக் கொண்டு வந்துள்ளேன். வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கு இந்தியா தொடர்ந்துஉதவிகளைச் செய்யும். போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலனில் இந்தியா அதிக சிரத்தை கொண்டுள்ளது" என்றார்.

இதற்கு முன்னர் இலங்கையின் அதிபராக கோத்தபய இராசபக்சே நொவெம்பர் 19, 2019 ஆம் ஆண்டு பதவியேற்றார். அடுத்த நாளே இலங்கைக்கு ஜெய்சங்கர் செலவு மேற்கொண்டார். அப்போதும் வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கர் போதும் இதே வாக்குறுதிகளை அளித்திருந்தார். ஆனால் இராசபக்சா அரசு அவர் சொல்வதை செவிமடுத்துவதாக இல்லை!

தமிழ்மக்களுக்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகளையே மீண்டும் கொடுத்துவிட்டு நாடு திரும்பியுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஜெயசங்கர்!

தமிழ்மக்களுக்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகளையே மீண்டும் கொடுத்துவிட்டு நாடு திரும்பிய இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஜெயசங்கர் நாடு திரும்பியுள்ளார்! அடுத்து என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## 'கருணா'வை பகிஸ்கரிக்க ஊடங்களோ அல்லது 'வன்னி' மண்ணின் எதிர்ப்பைக் காட்ட ஒரு சிலரோ அன்று முன்வந்திருக்க வேண்டுமல்லவா?

*(பின் பக்கத் தொடர்ச்சி)*

சில நாட்களுக்கு முன்னர் காலடி எடுத்து வைத்தார்.

திடீரென ஊடகங்களுக்கும் தனது சகாக்களுக்கும் அறிவித்துவிட்டு கிளிநொச்சியில் வந்திறங்கிய அவருக்கு அரசின் சார்பாக வழங்கப்பட்ட பலத்த பாதுகாப்பு துணை நின்றது- சுமந்திரன் எம்பிக்கு உள்ளது போலவே.

அவர்கள் அங்கு ஊடகங்களின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றியபோது பின்வருமாறு கூறுகின்றார்.

''நான் வன்னி மண்ணுக்கு நன்கு பரிச்சியமானவன். இங்குள்ள மக்களின் துன்பங்களை மற்றும் அவர்களின் தேவைகளை நன்கு உணர்ந்தவன். எனவே தான் நான் அவர்களுக்கு சேவையாற்ற வந்துள்ளேன். என்னை நம்பி பாராளுமன்ற மற்றும் மாகாண உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடவுள்ள எனது கட்சியின் பிரதிநிதிகளை தேர்ந்தெடுங்கள்.என்னோடு கைகோர்த்துக் கொள்ள வாருங்கள்'' என்றார்.

அந்த நேரத்தில் அங்கு சென்றிருந்த ஒருவராவது சில கேள்விகளை முன்வைத்திருக்கலாம்.

அமைதியாகக் கேட்டிருக்கலாம்.

"கருணா அவர்களே! நீங்கள் வன்னி மண்ணின் மக்களுக்கு சேவை செய்ய முன்வந்துள்ளதாகக் கூறினீர்கள்.

அதற்கு முன்னர் நீங்கள் ஏன் வன்னி மண்ணிலிருந்து வெளியேற்றப்படீர்கள்? வன்னி மக்கள் உலக நாட்டுப் படைகளின் குண்டுவீச்சுகளுக்கு இலக்காகி அலறித் துடித்து வீழ்ந்து மடிந்து இறந்த போது யார் பக்கத்தில் நின்றீர்கள்?

தலைவர் பிரபாகரன் அவர்களிள் உடல் இது தான் என்று அடையாளம் காட்டப்பட்ட போது உங்களைத் தானே அரசாங்த்தின் பிரதிநிதிகள் அழைத்து வந்தார்கள்?

நீங்கள் அந்த உடல் 'அவருடையது' என்று தானே அடையாளம் காட்டினீர்கள்?

அவ்வாறான நீங்கள் என்ன துணிவோடு இங்கு வந்தீர்கள்

போன்ற கேள்விகளை கருணாவிடம் கேட்டிருக்க வேண்டும் அல்லவா?

அவ்வாறான கேள்விகள் எதுவும் எழவில்லை. கருணா தொடர்ந்து பேசினார்.


'' நான் வடக்கிலும் கிழக்கிலும், தமிழ்க் கட்சிகளுடன் இணைந்தே மாகாண சபை தேர்தலை சந்திப்பேன். தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைய தயாராக உள்ளேன;'' இவ்வாறு கருணா விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.எமது கட்சியான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற கட்சியை பலப்படுத்துவதற்காக கிளிநொச்சியில் முக்கிய சந்திப்புக்களை ஏற்பாடு செய்துள்ளோம். உண்மையில் கடந்த தேர்தலில் எமது கட்சிக்கு அம்பாறை மாவட்ட மக்கள் ஆதரவு வழங்கி இருந்தார்கள். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் உள்ளனர். இவ்வாறான நிலையில் எமது கட்சி மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுள்ளது. அதனை பலப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உண்மையில் மாகாண சபை தேர்தலில் போட்டியிடவுள்ளோம். அதற்கான வேட்பாளர்களையும் தெரிவு செய்துள்ளோம். ஆனால் தேசிய கட்சியுடன் இணைந்து அல்ல.தமிழ் கட்சிகளுடன் இணைந்தே போட்டியிட தீர்மானித்துள்ளோம். தமிழ் கட்சிகளுடன் இது தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு அனைவரையும் ஒன்றாக இணைத்து போட்டியிடுவது என்ற முடிவில் இருக்கின்றோம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாம் உருவாக்கிய கட்சி. அவர்கள் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டியும், விமர்சித்தும் உள்ளோம். அந்த வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்புடனும் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதற்கும் தயாராகவே உள்ளோம். தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். அந்த ஒற்றுமைக்காக தமிழ்த் தலைவர்கள் முன்வர வேண்டும். தமிழ்த் தலைமைகள் கடந்த கால செயற்பாடுகள், அரசியல்களை விட்டு தற்போது காணப்படும் சூழலை கருத்தில் கொண்டு ஒற்றுமையாக செயற்பட முன்வர வேண்டும்'' என கருணா உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார். இந்த இடத்தில் நாம் முக்கியமான ஒன்றைக் கவனிக்க வேண்டும். அவர் அங்கு உரையாற்றியபோது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாம் உருவாக்கிய கட்சி – என கருணா ஒரு சந்தர்ப்பத்தில் அழுத்தமாகக் கூறினார். அவர் இன்னும் விடுதலைப் புலிகள் அமைப்பில் உரிமைகொண்டாடுகின்றார். அவரை நீக்கிய அமைப்பை இன்னும் 'எனது' என்கின்றார்.

இந்த நேரத்தில் நாம் ஒன்றை கூறவிரும்புகின்றோம். இந்தியாவின் டெல்லியில் போராட்டத்தை நடத்தும் விவசாயிகள் அரசாங்கத்தின் அமைச்சர்களோடு பேச்சுவார்த்தை நடத்த செல்கின்றபோது, குடிப்பதற்கு நீர் உண்பதற்கு உணவு என்பனவற்றை தாமே எடுத்துச் செல்கின்றனர். "நாம் உங்களோடு பேச வந்துள்ளோம் தவிர உங்களோடு விருந்துண்ண வரவில்லை'' என்று கூறி அமைச்சர் தரப்பு உணவுண்ண அழைத்தபோது அதனை நிராகரித்தார்கள்.

ஆனால் கிளிநொச்சியில் கேட்கவேண்டிய கேள்விகளையே முன்வைக்க முடியாதவர்கள் கருணாவின் அழைப்பை தவிர்த்திருக்கலாம் அல்லது நிராகரித்திருக்கலாம் அல்லவா? இந்தக் கேள்வியோடு நான் இந்தக் கட்டுரையை தற்காலிகமாக நிறைவு செய்கின்றேன்.


CIBC
இந்தப் பொங்கலில் குடும்பத்துடன் அதிகம் பகிரவும்
$0 எனும் பரிமாற்றக் கட்டணத்துடன்[1], இந்த விடுமுறை காலத்தில் நீங்கள் இன்னும் அதிகம் கொடுக்கலாம்.
• இப்போது உங்கள் தகுதியான CIBC கிரெடிட் கார்டு மூலம் பணம் செலுத்தி, வெகுமதிகளைப் பெறுங்கள்[2,3]
• CIBC Online Banking® அல்லது CIBC Mobile Banking® மூலம் எந்தச் சாதனத்திலிருந்தும் எளிதாகப் பணம் அனுப்புங்கள், அது 24 மணிநேரத்திற்குள் வழங்கப்படும்[4]
• உங்கள் முதல் பரிமாற்றத்தில் $50 பெற்றிடுங்கள்[5]. பயன்படுத்துவதற்கான சலுகைக் குறியீடு: GMT50
Learn more at cibc.com/globaltransfer
CIBC Global Money Transfer™
[1]CIBC foreign exchange rates apply. A CIBC Global Money Transfer and a Foreign Exchange transaction count towards your allowable transaction limit. Bank account transaction fees may apply. Must have a CIBC savings or chequing account, personal line of credit or an eligible credit card to send a CIBC Global Money Transfer. [2]Only primary cardholders can use their eligible credit card account to pay for the CIBC Global Money Transfer™ service. [3]CIBC does not charge interest on a CIBC Global Money Transfer appearing on your statement if we receive full payment of the Amount Due (or for a CIBC Global Money Transfer that has been converted to an Installment Plan during that statement period, if we receive payment in full of the Balance) by the payment due date for that statement. Capitalized terms in this footnote have the meanings set out in the CIBC Cardholder Agreement. [4]Most transfers are completed by the next business day; some transfers require 2 to 3 business days. CIBC Cube Design is a trademark of CIBC. All other trademarks are owned by CIBC. [5]If you have a CIBC personal bank account (savings, chequing or a personal line of credit) but have not yet tried CIBC Global Money Transfer ("GMT"), request a GMT transfer and you will receive $50 CAD in your CIBC account in 4-6 weeks.


Happy Thai Pongal & Tamil Heritage month
தைப் பொங்கல் மற்றும்
தமிழ் மரபுத் திங்கள் வாழ்த்துக்கள்
Hon. Mary Ng, MP
Markham-Thornhill
16 Esna Park Drive, Unit 107, Markham ON L3R 5X1
905-479-8100 | Mary.Ng@parl.gc.ca
maryng.libparl.ca | @maryngMarkhamThornhill
@Mary_Ng | @Mary_Ng

THE GUARDIAN
HOME REALTY INC.

Where life begins...



நட்பான எங்கள்
விற்பனை நிறுவனத்தின்
முகவர்கள் மூலம் தங்களது
வீட்டின் பெறுமதியை சட்டபூர்வமாக
மதிப்பிட்டு அறிக்கையை (Appraisal)
பெற்றுக்கொள்ளலாம்

*We recruit*
and train personnels who want to become
a real estate agent as a career.

*We provide*
them an opportunity as an agent in our company.

Contact us
80 - F119 Nashdene Road,
Scarborough ON M1V 5E4
Phone: (416) 989 - 6565 web: www.theguardianhomes.com


Happy Thai Pongal
& Tamil Heritage Month
அனைவருக்கும் தைப்பொங்கல்
மற்றும் தமிழ் மரபுத் திங்கள்
வாழ்த்துக்கள்
Aris Babikian, MPP
Scarborough - Agincourt
www.arisbabikanmpp.ca
416 297 6568
aris.babikian@pc.ola.org


Dream Design Build
Paramount
Custom Homes Ltd.
416-268-5296
www.paramountcustomhomesltd.net
REGISTERED BUILDER
TARION
TARION WARRANTY CORPORATION
Incredible Quality
Quick Turnaround
Competitive Prices
140-100 Cowdray Court, Scarborough, ON M1S 5C8
Paramountcustomhomesltd@gmail.com

# முஸ்லிம் நாடுகளின் கோபத்தை இலங்கையால் சமாளிக்க முடியுமா?

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

எரிப்பதா புதைப்பதா பிரச்சனையில் இலங்கை சிக்கித் தவிக்கிறது. புதைத்தால் பிக்குமார்களின் கோபத்துக்கு ஆளாக வேண்டும், எரித்தால் இஸ்லாமியர்களின் சாபத்துக்கு ஆளாக வேண்டும். இதில் நடுநிலை என்பதில்லை.

இதில் இன்றுவரை அரசு எரிக்கும் கட்சி பக்கமே நிற்கிறது. ஆனால் புதைக்கும் கட்சியின் வலிமையை இலங்கை உணர்ந்துள்ளதா என்று தெரியவில்லை.



தனது கடும்போக்கு நிலையை தொடரும் இலங்கை அரசு கோவிட்-19 தொற்றால் இறந்தவர்களை எரித்தே தீருவோம் என்று விடாப்பிடியாக நிற்பதால், இஸ்லாமிய நாடுகள் மற்றும் அமைப்புகளிடமிருந்து கிடைக்கக் கூடிய உதவிகளை இழக்கும் அபாயத்திலுள்ளது.

இலங்கையின் இந்த நடவடிக்கை "அரசியல் காரணங்களுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களுக்கும் அளிக்கப்படும் தண்டனையாகும்" என்று பிரிட்டனின் மிகப் பெரிய இஸ்லாமியக் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்சின் ஆப் பிரிட்டனின் (MCB) தலைவர் சர். இக்பால் சாக்கரைன் எச்சரித்துள்ளார். இலங்கையில் சூழல் மிகவும் பாரதூரமாகவுள்ளது என்று கூறி அரசின் நிலைப்பாடு "ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று கண்டித்துள்ளார்.



அனைத்து நாடுகளிலும் அடக்கமே

கோவிட்-19 தொற்றால் உயிரிழப்பவர்களின் இறுதிக் கிரியைகள் தொடர்பில் அரசின் நிலைப்பாடு பன்னாட்டு அரங்கில் விமர்சிக்கப்பட்டாலும் அதை இலங்கை உணர்ந்ததாகத் தெரியவில்லை. இது பல கேள்விகளை எழுப்புகிறது. இதில் அடிப்படைக் கேள்வி இலங்கை ஜனநாயக நாடா அல்லது சர்வாதிகார நாடா என்பது. சகல அதிகாரங்களும் கொண்ட முடியாட்சியில் கூட இறுதிக் கிரியைகள் விடயத்தில் தலையிடுவதில்லை.

கொரோனோ தொற்றுக்குத் தப்பாத நாடில்லை. எவ்வித வித்தியாசமும் இன்றி இந்த நோய் அனைவரையும் தாக்கியுள்ளது. சவுதி அரேபியா தொடக்கம், இந்தியா, இந்தோனீசியா, இரான், இராக், பாகிஸ்தான், வங்கதேசம் என முஸ்லிம்கள் செறிந்து வாழும் நாடுகளில் கூட இந்தக் கொடியத் தொற்று நோயின் காரணமாக உயிரிழப்பவர்களை அவர்கள் நல்லடக்கம் செய்யப்படுகின்றனர்.

ஆனால் இலங்கையோ ஊரோடு ஒத்து வாழாமல் தனித்து நிற்கிறது. இதன் மூலம் சர்வதேசத்தோடு முரண்பட வேண்டிய நிலைக்கும் அந்நாடு தள்ளப்பட்டுள்ளது. அதன் விளைவுகளை இலங்கை அறிந்ததாகத் தெரியவில்லை.

பிறந்து இருபது நாட்களேயான ஆண் குழந்தையொன்று வலிந்து தகனம் செய்யப்பட்டதும் அதையடுத்து எழுந்த ஆர்ப்பாட்டங்களின் காணொளிகளும் சமூக ஊடகங்களில் தீயாகப் பரவின. இதைத் தொடர்ந்து பிரிட்டன், இத்தாலியில் போன்ற நாடுகளில் இலங்கையைக் கண்டித்து வீதி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இதனிடையே இலங்கையில் இருக்கும் சிறுபான்மை அரசியல் கட்சிகள் உள்நாட்டிலுள்ள முஸ்லிம்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளை முஸ்லிம் நாடுகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று கோரியுள்ளன. இலங்கையிலுள்ள முஸ்லிம் மக்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்துக்காக இஸ்லாமிய நாடுகள் மில்லியன் கணக்கான டாலர்களை உதவியாக வழங்குகிறது.

மாறுபட்ட கருத்துக்கள்

கொரோனா தொடர்பான பிரச்சனைகள் அதிகரித்து வரும் நிலையில், அரசால் நியமிக்கப்பட்ட இரண்டு வல்லுநர் குழுக்கள் நேர்மாறான அறிக்கையை அளித்துள்ளன. ஒன்று எரிப்பதே சரியானது என்றும் மற்றொன்று புதைப்பதில் தவறில்லை என்றும் கூறியுள்ளது. இதுமட்டுமின்றி அரசின் இரு அமைச்சர்களும் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து குழப்பத்தைக் கூட்டியுள்ளனர்.

அமைச்சரவைப் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல, "இதற்கும் அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. வல்லுநர் குழுவே இறுதி முடிவெடுக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று அரசு நடவடிக்கை எடுக்கிறது" என்று அல்ஜசீரா தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ளார்.

ஆனால் ராஜாங்க அமைச்சரான திலும் அமுனுகம, "மக்கள் அந்தக் குழுக்களுக்கு வாக்களிக்கவில்லை, அவர்கள் கோத்தாபய ராஜபக்ஷவுக்கே வாக்களித்தனர். எனவே இறுதி முடிவை அவரும் அரசுமே எடுக்கும். வல்லுநர் குழு தமது பரிந்துரையில் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் எமது இறுதி முடிவு முந்தைய முடிவே" என்று உள்ளூர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.



அரசின் முந்தைய முடிவென்பது கொரோனாவால் இறந்தவர்களை எரிப்பது என்பதே. ஆனால் உலகெங்கும் நடந்த ஆய்வுகளும் 85க்கும் மேலான ஆய்வுக் கட்டுரைகளும் கொரோனாவை பரப்பும் நுண்கிருமி நீரின் மூலம் இறந்து அடக்கம் செய்யப்பட்ட உடல்கள் மூலமும் பரவாது என்பதைத் தெட்டத் தெளிவாக நிரூபித்துள்ளது. அடக்கம் எனும் நடைமுறையைத் தான் இஸ்லாமிய நாடுகளும் இந்த விடயத்தில் பின்பற்றுகின்றன.

இதன் பின்னணியிலேயே MCB சிறப்புச் செயலணி ஒன்றை நியமித்துள்ளது என்றும், தாங்கள் இப்போது "பெரியளவில்" செயற்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளதாகவும் அதன் தலைவர் சர் இக்பால் சக்கரைன் கூறியுள்ளார்.

அதிகரிக்கும் அழுத்தங்கள்

தாங்கள் 20 நாடுகள், பல நாடுகளின் தலைவர்கள் மற்றும் வெளியுறவு அமைச்சகங்களுடன் தொடர்பிலிருப்பதாகவும், அவர்கள் அனைவரும் இலங்கை மீது அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளனர் என்றும் MCB தெரிவித்துள்ளது. "தற்போது இலங்கையில் நடைபெற்றும் நியாயமற்றது மற்றும் சரவதேச சட்டங்களின் கீழ் சட்டவிரோதமானது".

பிரிட்டனின் வெளியுறவு அமைச்சகம் தமது கவலைகளைத் தெரிவித்து இலங்கைக்கு கடிதம் எழுதியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். துருக்கிய அதிபர் எர்துவானுக்கும் தாங்கள் இலங்கையில் முஸ்லிம்கள் எரியூட்டப்படுவது குறித்து எழுதியுள்ளதாகவும் MCB கூறுகிறது.

தென் ஆப்ரிக்கா, போட்ஸ்வானா, மலாவி, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, மலேசியா, இந்தோனீசியா ஆகிய நாடுகள் ஏற்கனவே MCB நிலைப்பாட்டுக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளன. எனவே "இலங்கை அரசு புத்தியோடு நடந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம். இலங்கையால் முன்னெடுக்கப்பட்டு ஆபத்தான இந்த முன்னுதாரணம் நிலைநாட்டப்பட நாங்கள் விரும்பவில்லை" என்று MCB வலியுறுத்தியுள்ளது.




தடைகளுக்கு வாய்ப்பு

இலங்கை அரசு தொடர்ந்து தனது கடும்போக்கு நிலைப்பாட்டை முன்னெடுத்தால், பல நாடுகள் அதன் மீது தடைகளை விதிக்கும் சூழல் ஏற்படும் என்று MCB எச்சரித்துள்ளது.

கோவிட் தொற்றால் இறந்தவர்களின் உடல்களை உயிராயுதமாக பயன்படுத்தக் கூடும் என்று இலங்கை அதிகாரிகள் விடுத்துள்ள அறிக்கை "முட்டாள்தனமானது" என்று சர் இக்பால் சக்கரைன் சாடியுள்ளார்.

இஸ்லாமிய நாடுகள் தமது நிதியுதவிகளைக் குறைக்குமாயின் ஏற்கனவே மோசமான நிலையில் இருக்கும் இலங்கையின் பொருளாதாரம் மேலும் நெருக்கடியைச் சந்திக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

உலகளவில் இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு வலுவான ஒரு அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பு என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. மத்திய கிழக்கிலும், வட ஆப்ரிகாவிலும் இருக்கும் முஸ்லிம் நாடுகளில் செல்வச் செழிப்புக்கும் குறைவில்லை. உலகெங்கும் பரந்து வாழும் இஸ்லாமியர்கள் அந்தந்த நாடுகளிலுள்ள அறக்கட்டளைகளுக்கு தான தர்மங்களைச் செய்வதில் பின் தங்கியதில்லை.

சர்வதேசத்துடன் முரண்பட்டு உள்நாட்டில் தனது ஆளுமையை நிலைநாட்ட அரசு நினைக்குமாயின் அது பேதமையே. எவ்வளவு விரைவாக அந்த உண்மையை அரசு உணர்ந்து யதார்த்தமாக நடந்து கொள்கிறதோ அது நாட்டுக்கும் அரசுக்கும் நல்லது.

# அரசியல் கைதிகள் பொங்கல் தினத்திற்கு முன் விடுதலை செய்யப்பட வேண்டும்

**மன்னாரில் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரி பிரார்த்தனை வாரம் ஆரம்பம்**




தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரி மக்கள் இன்று வியாழக்கிழமை முதல் எதிர் வரும் 14 ஆம் திகதி வரை பொது இடம் மற்றும் இறை பிரார்த்தனை இடம் பெறும் இடங்களில் மஞ்சல் மற்றும் கருப்பு நிற தோரணங்களை பறக்க விட்டு இறை பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் குழுமத் தலைவர் ஜே.ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரி சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் குழுமத் தலைவர் ஜே. ஜாட்சன் பிகிராடோ தலைமையில் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் இலங்கையின் வடக்கு கிழக்கு வாழ் பொது மக்கள் இணைந்து பிராத்தனை வாரம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

இவ்விடையம் தொடர்பாக மன்னாரில் இன்று வியாழக்கிழமை (7) மாலை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அனைத்து மக்களும் இணைந்து குரல் கொடுத்து வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக கடந்த 5 ஆம் திகதி வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டி கவனயீர்ப்பு போராட்டம் இடம் பெற்றது.

அதன் இன்னும் ஓர் வடிவமாக மக்கள் முன்னெடுத்து வருகின்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டிய பிரார்த்தனை வாரத்தினை இன்று வியாழக்கிழமை தொடக்கம் (7) எதிர் வரும் 14 ஆம் திகதி வரையிலான ஒரு வாரம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டி பிரார்த்தனை செய்யும் வாரமாக நாங்கள் அனுஸ்ரித்து வருகின்றோம்.

இன்று வியாழன் முதல் எதிர் வரும் 14 ஆம் திகதி வரை பொது இடம் மற்றும் இறை பிரார்த்தனை இடம் பெரும் இடங்களில் மஞ்சல் மற்றும் கருப்பு நிற தோரணங்களை பறக்க விட்டு அரசியல் கைதிகளின் விடுதலைக்காக பிராத்தனைகளை மேற்கொள்வோம்.

மக்களுடன் இணைந்து நாங்கள் இந்த வாரத்தில் அமைதியான முறையில் தமது கிராமங்களில் பொது இடங்களில் ஒன்று கூடி இறை பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும். நாங்களும் அவர்களுடன் இணைந்து கொள்ளுகின்றோம்.

இந்த நாட்டின் ஜனாதிபதி தமிழ் அரசியல் கைதிகளான சுமார் 147 ற்கும் மேற்பட்டவர்களை பொங்கல் பரிசாக அவர்களின் குடும்பங்களுடன் இணைக்க வேண்டும்.

இதனை வினையமாக கேட்பதுடன் இன்று வியாழக்கிழமை முதல் எதிர் வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை வரை மக்களுடன் இணைந்து பிராத்தனை வாரத்தினை முன்னெடுக்கின்றோம்.என தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் மதத்தலைவர்கள்,சட்டத்தரணி ஏ. அர்ஜீன் மற்றும் அரசியல் கைதியின் உறவினர் ஆகியோர் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

- மன்னார் நிருபர்

# Sunshine Florist

Sunshine Florist
Creative Solutions For All Your Floral Needs

Creative Solutions For All Your Floral Needs.

Vaughan நகரில் வாழும் தமிழ் மக்களுக்காக புதியதோர் பூக்கடை

## சண்சைன் பூக்கடை





2021, ஜனவரி மாதம் 19ம் திகதி
செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு
திறந்து வைக்கப்படும்

- திறப்பு விழாவை முன்னிட்டு விசேட விலைகளில் உங்களுக்கு தேவையான பூக்கள் மற்றும் மாலைகள்
- மற்றும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மல்லிகை, கனகாம்பரம் போன்ற பல வகைப் பூக்கள்
- மற்றும் மலர் மாலைகள் ஆகியன எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

**We serve:**

Cut Flowers
Fresh Jasmine
Bouquets
Wedding Arrangements
Vase Arrangements
Funeral Flowers
Sympathy Flowers and more...

905 553 0777
sunshineflorist777@gmail.com

112 - 9441 Jane Street
Vaughan ON,L6A 4H8



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டியைத் தொடங்கி வைக்க முதல்வர், துணை முதல்வர் வருகை : உறுதி செய்த அமைச்சர் ஆர்.பி.உதயகுமார்

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டியை முதல்வர், துணை முதல்வர் நேரில் வந்து தொடங்கி வைக்கவுள்ளதாக அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தெரிவித்தார்.அலங்காநல்லூர் மற்றும் பாலமேட்டில் ஜல்லிக்கட்டுப் போட்டிகளைப் பாதுகாப்பாக நடத்துவது குறித்து வருவாய்த்துறை அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் ஆட்சியர் மற்றும் எஸ்.பி ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர். அப்போது அமைச்சர், அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டியை முதல்வர், துணை முதல்வர் நேரில் தொடங்கி வைக்க உள்ளதாகத் தெரிவித்தார்.

பொங்கலையொட்டி மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய இடங்களில் வரும் 14, 15, 16 தேதிகளில் தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டி நடைபெற உள்ளது.இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம், உள்ளூர் விழா கமிட்டிக்குழுவுடன் இணைந்து செய்து வருகிறது. போட்டியில் கலந்து கொள்ளும் மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்களுக்கு கரோனா பரிசோதனை முகாம் வரும் 10ம் தேதி தொடங்குகிறது.ஜல்லிக்கட்டு காளைகளுக்கான பதிவு 11ம் தேதி தொடங்குகிறது.

போட்டியில் குறைந்த காளைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் எனக் கூறப்படுவதால் தமிழகம் முழுவதும் இருந்து மதுரை ஜல்லிக்கட்டுகளில் பங்கேற்க காளை உரிமையாளர்கள் தற்போதே ஆர்வம் காட்டி வருகின்றனர்.இந்நிலையில் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுப் போட்டி நடைபெறும் இடத்தில் முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் பாதுகாப்பு குறித்து வருவாய் துறை அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் இன்று ஆய்வு செய்தனர். அவருடன் மாவட்ட ஆட்சியர் மாவட்ட ஆட்சியர் அன்பழகன், மாவட்ட எஸ்.பி., சுஜித் குமார் மற்றும் மாவட்ட கால்நடைத்துறை அதிகாரிகள், சுகாதாரத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.



அப்போது கரோனா பாதுகாப்பு வழிமுறைகளை முறையாக பின்பற்றுவது. 50 சதவீத பார்வையாளர்களை கரோனோ பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி எவ்வாறு அனுமதிப்பது, தனிமனித இடைவெளியுடன் பார்வையாளர்களுக்கான கேலரி அமைப்பது போன்ற நடைமுறைகள் குறித்தும் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் அதிகாரிகளுடன் ஆலோசித்தார்.அதன்பின் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:வரும் 16ம் தேதி அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டியை முதல்வரும், துணை முதல்வரும் தொடங்கி வைக்க உள்ளனர்.

போட்டியை நேரில் தொடங்கி வைத்துவிட்டு போட்டியை முதல்வரும் துணை முதல்வரும் நேரில் காண்பார்கள்.ஜல்லிக்கட்டுப் போட்டியில் பங்கேற்கும் மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள், உதவியாளர்கள் மாவட்ட நிர்வாகம் சார்பில் அமைக்கப்படும் முகாமில் கலந்து கொள்ள முடியாதவர்கள் அரசு அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை மையங்களில் கரோனா பரிசோதனை செய்து சான்றிதழ்களைப் பெற்று வரலாம்.போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். கரோனா பரிசோதனை ஏற்பாடுகளும் தயாராக உள்ளது. தனிமனித இடைவெளியுடன் பார்வையாளர்கள் அமரும் கேலரி அமைக்க விழாக் குழுவினரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. வீரத் தமிழர்களின் அடையாளமாக உள்ள ஜல்லிக்கட்டு போட்டியை கரோனோ பெருந்தொற்று காலத்தில் தடைப்படாமல் மருத்துவக் குழுவின் வழிகாட்டுதலைப் பின்பற்றி போட்டிகள் நடத்தப்படும்.

அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி முறையாக நடத்துவதை உறுதி செய்யப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தமிழக திரையரங்குகளில் நூறு சதவீத இருக்கைக்கு எதிரான வழக்குகள் நாளை விசாரணை: உயர் நீதிமன்ற நீதிபதிகள் அறிவிப்பு



தமிழகத்தில் திரையரங்குகளில் நூறு சதவீத இருக்கைக்கு அனுமதி வழங்கியதை எதிர்த்து தாக்கலான மனுக்களை அவசர மனுவாக விசாரிக்க வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்ததால் அந்த மனுக்களை நாளை விசாரிப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.மதுரை அண்ணாநகர் வழக்கறிஞர் எஸ்.முத்துக்குமார், பழைய குயவர்பாளையம் போனிபேஸ் ஆகியோர் உயர் நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல் செய்த மனுக்களில் கூறியிருப்பதாவது:

இந்தியா முழுவதும் கரோனா வைரஸ் தொற்று காரணமாக கடந்தாண்டு மார்ச் 15 முதல் திரையரங்குகள் மூடப்பட்டன. தமிழகத்தில் மார்ச் 17 முதல் திரையரங்குகள் மூடப்பட்டன. பின்னர் கடுமையான ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. கரோனா பரவல் குறைந்ததையடுத்து ஊரடங்கு தளர்த்தப்பட்டது. இதையடுத்து திரையரங்குகள் 50 சதவீத இருக்கையுடன் செயல்பட மத்திய அரசு அனுமதி வழங்கியது. அதன்படி தமிழகத்தில் நவ.10 முதல் 50 சதவீத இருக்கைகளுடன் திரையரங்குகள் செயலபட அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் திரையரங்கு அதிபர்கள், சினிமா தயாரிப்பாளர்கள், நடிகர்களின் கோரிக்கையை ஏற்று நூறு சதவீத இருக்கைகளுடன் திரையங்குகள் செயல்பட அனுமதி வழங்கியுள்ளது.இதற்கு மத்திய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தமிழக தலைமைச் செயலருக்கு மத்திய அரசு கடிதம் அனுப்பியுள்ளது. கரோனா தடுப்பு நடவடிக்கைகளில் மத்திய அரசு மற்றும் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை மாநில அரசுகள் கடுமையான பின்பற்ற வேண்டும்.நூறு சதவீத இருக்கைகளுடன் திரையரங்குகள் செயல்பட்டால் கரோனா தொற்று அதிகரிக்கும்.

உருமாறிய கரோனா பரவி வரும் சூழலில் திரையரங்குகளில் நூறு சதவீத இருக்கைகளுக்கு அனுமதி வழங்குவது ஆபத்தை விளைவிக்கும். எனவே, நூறு சதவீத இருக்கைகளுடன் திரையரங்குகள் செயல்பட அனுமதி வழங்கி தமிழக அரசு பிறப்பித்த அரசாணையை ரத்து செய்ய வேண்டும்.இவ்வாறு மனுக்களில் கூறப்பட்டிருந்தது.இந்நிலையில் மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர்கள் ராம்சுந்தர் , ஏ.கண்ணன், எஸ்.பாஸ்கர் மதுரம் ஆகியோர் நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், எஸ்.ஆனந்தி அமர்வில் இன்று காணொலி வழியாக ஆஜராகி தங்கள் மனுவை அவசர மனுவாக எடுத்து விசாரிக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து திரையங்குகளில் நூறு சதவீத இருக்கைக்கு அனுமதி வழங்கியதை எதிர்த்து தாக்கலான மனுக்களை நாளை (ஜன. 8) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

# "வரும் 27ஆம் தேதி சசிகலா விடுதலையாக வாய்ப்பு" வருமான வரி வழக்கில், சசிகலா தரப்பு தகவல்

வரும் 27ஆம் தேதி சசிகலா விடுதலையாக வாய்ப்பு உள்ளது என வருமான வரி வழக்கில், சென்னை ஐகோர்ட்டில் சசிகலா தரப்பு தகவல் தெரிவித்து உள்ளது.



சசிகலாவுக்கு எதிரான வருமான வரித்துறை வழக்கு சென்னை ஐகோர்ட்டில் இன்று விசாரணைக்கு வந்தது. சசிகலா வரும் 27 நந்தேதி விடுதலையாக வாய்ப்பு உள்ளதால் பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் தேவை என சசிகலா தரப்பு வழக்கறிஞர் கோரிக்கை விடுத்தார். கோரிக்கையை ஏற்றுக்கொண்டு வழக்கை ஐகோர்ட் பிப்ரவரி 4 ந்தேதிக்கு வழக்கை ஒத்திவைத்தது.

சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய 3 பேருக்கும் சுப்ரீம் கோர்ட் தலா 4 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.10 கோடியே 10 ஆயிரம் அபராதமும் விதித்தது. 3 பேரும் பெங்களூருவில் உள்ள பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர்.

இந்நிலையில் கடந்த நவம்பர் மாதத்தில் சசிகலாவும், இளவரசியும் தங்களுக்கு விதிக்கப்பட்ட தலா ரூ.10 கோடியே 10 ஆயிரம் பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் செலுத்தினர். இதையடுத்து சசிகலா தனக்கு சிறை விதிமுறையின்படி சலுகை காட்டி, முன்கூட்டியே விடுதலை செய்யுமாறு சிறைத்துறையில் மனு அளித்தார். அந்த மனு பரிசீலனையில் உள்ள நிலையில், சசிகலா வருகிற 27ந்தேதி விடுதலையாக உள்ளார் என்பதை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சிறைத்துறை தெரிவித்துள்ளது.

27ந்தேதி எந்த நேரத்தில் அவர்களை விடுதலை செய்வது என்பது குறித்து போலீசார் ரகசியமாக ஆலோசனை நடத்தி வருவதாக தெரிகிறது. மேலும், சசிகலா சிறையில் இருந்து வெளியே வரும்போது அவரது பாதுகாப்பு கருதி கர்நாடக மாநில எல்லைக்குள் தமிழகத்தில் இருந்து அவரது ஆதரவாளர்கள் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் யாரையும் உள்ளே அனுமதிக்கப்படாது என்பதும் தெரியவந்துள்ளது.

# கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த மாணவியின் கண்கள் தானம்



செய்யாறு அருகே கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த கல்லூரி மாணவியின் கண்களை அவரது குடும்பத்தினர் தானமாக வழங்கினர்.செய்யாறு அடுத்த தும்பை கிராமத்தை பூர்வீகமாக கொண்ட வர் நாராயணன். இவர், தற்போது குடும்பத்துடன் பெங்களூருவில் வசித்து வருகிறார். இவருக்கு 3 மகள்கள் உள்ளனர்.

இதில், மூத்த மகளுக்கு வரும் 25ம் தேதி திருமணம் நடைபெற உள்ள நிலையில், செய்யாறு அருகேயுள்ள முனுகப்பட்டு கிரா மத்தில் உள்ள பச்சையம்மன் கோயிலில் குலதெய்வத்துக்கு பொங்கல் வைத்து வழிபட்டுள்ளனர். குடும்பத்தினருடன் கிராமத்தில் உள்ள வீட்டில் தங்கியிருந்தபோது, அருகே உள்ள விவசாயக் கிணற்றில் நேற்று முன்தினம் பிற்பகல் நாராயணன் குடும்பத்தினர் குளிக்கச் சென்றுள்ளனர். அப்போது, கிணற்றின் படிக்கட்டில் அமர்ந்திருந்த நாராயணின் இளைய மகள் சுதா (19) என்பவர் தவறி தண்ணீரில் விழுந்தார்.

அவருக்கு நீச்சல் தெரியாது என்பதால், அருகே இருந்தவர்கள் கிணற்றில் குதித்து தேடும் பணியில் ஈடுபட்டனர்.ஆனால், கிணற்றில் தண்ணீர் அதிகம் இருந்ததால் அவரை மீட்க முடியவில்லை.இதுகுறித்து தகவலறிந்த செய்யாறு தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று தண்ணீரில் மூழ்கிய சுதாவை உயிரிழந்த நிலையில் மீட்டனர். இது தொடர்பாக செய்யாறு காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.2ம் ஆண்டு கல்லூரி மாணவிஇதற்கிடையில், சுதாவின் கண்களை தானம் செய்ய அவரது குடும்பத்தினர் முன்வந்தனர்.

அதன்படி, காஞ்சிபுரம் தனியார் கண் மருத்துவமனை குழுவினர் சுதாவின் கண்களை தானமாக நேற்று முன்தினம் இரவு பெற்றனர். உயிரிழந்த சுதா, பெங்களூருவில் உள்ள ஒரு கல்லூரியில் இளநிலை பட்டப்படிப்பில் இரண்டாம் ஆண்டு படித்து வந்துள்ளார்.

# இவ்வார ராசிபலன்

**08-01-2021 வெள்ளி தொடக்கம் 14-01-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** மர்மநோயும் தர்மவினையும் விலகக்கூடிய நல்ல வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: ஔஷதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,O




**ரிஷபம்:** பாக்கியமான சூழ்நிலைகள் படியேறி வரக்கூடிய நல்ல வாரம். ஆதாயம் பெருகும். சகோதரியினால் நன்மை உண்டு. உடல் நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில் அபிவிருத்தி அடையும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக் கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். பருப்புதானம் பாவம் போக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: உலகளந்த பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,K




**மிதுனம்:** ஆதாயமோ அனுகூலமோ சேதாரமில்லாமல் கிடைக்கக்கூடிய ஆதாரமான வாரம். சகோதரியால் அனுகூலம் உண்டு. அபரணச் சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. கடன் சுமை அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனம் தேவை. அரசு வகையில் ஆதாயம் உண்டு. குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மறைமுக எதிர்ப்புகள் விலகும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: புட்டுச் சொக்கநாதர், அதிர்ஷ்ட எண்: 4,7,3,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,P




**கடகம்:** விருப்பப்பட்ட விஷயங்கள் பொருத்தமாகக் கிடைக்கக்கூடிய திருத்தமான வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும்.உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** இல்லத்திலும் மற்றவர் உள்ளத்திலும் மதிப்பு உயரக்கூடிய மகத்தான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹாரிஹரசுதன், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**கன்னி:** மெய்யான நட்புக்களால் மேன்மைகள் கிடைக்கக்கூடிய நன்மையான வாரம். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். சொத்து சேர்க்கை உண்டு. உழைப்பில் கவனம் தேவை. கோரிக்கை நிறைவேறும். மனை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார வளம் மேம்படும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மணக்குழபகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,8,2,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,A




**துலாம்:** தங்கம் வாங்கும் யோகமும், தன்நிலையில் உயர்வும் கிடைக்கக்கூடிய உன்னதமான வாரம். காதல் பிரிவை ஏற்படுத்தும். வீண் குழப்பங்கள் வந்து போகும். உடல் நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய முயற்சிகள் கை கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. அயல் நாட்டுப் பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான நாள். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச் செய்தி வரும். வழிபட வேண்டிய தெய்வம்: பாம்பன்சுவாமி
அதிர்ஷ்ட எண்: 1,4,9,3, அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,V




**விருச்சிகம்:** தோதான செயல்பாட்டால் மேலான லாபம் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். கனிவான வாரம். காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உணடு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. வழிபட வேண்டிய தெய்வம்: பிரயாண சித்தி கணபதி
அதிர்ஷ்ட எண்: 4,6,1,5, அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**தனுசு:** வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகி கேட்ட உதவிகள் கிடைக்கக்கூடிய எதார்த்தமான வாரம். அமைதியான வாரம். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி-வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தசபுஜ ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 8,0,1,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**மகரம்:** மாணவர்களுக்கு மன உறுதியும் மீனவர்களுக்கு பண-வரவும் கிடைக்கக்கூடிய பாக்கியமான வாரம். சகோதரியால் அனுகூலம் உண்டு. அபரணச் சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. கடன் சுமை அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனம் தேவை. அரசு வகையில் ஆதாயம் உண்டு. குடும்ப கெ-ளரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மறைமுக எதிர்ப்புகள் விலகும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கமல விநாயகர், அதிர்ஷ்ட எண்: 4,7,3,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,B




**கும்பம்:** கட்டம்கட்டிப் பார்த்தவங்க முன்னாடி பட்டம் பதவி கிடைக்கக்கூடிய வாரம். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத் தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். உதவிகள் கிடைக்கும் நாள். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கனக துர்க்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U




**மீனம்:** தெய்வ அருளும் தேவையான பொருளும் கோடை-வயாகக் கிடைக்கக்கூடிய மேன்மையான வாரம். மனோ தைரியம் அதிகரிக்கும். நீண்டநாள் ஆசை நிறைவேறும். கமிஷன் தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. கௌரவம் உயரும். கலைத்துறை ஈடுபாடு அதிகரிக்கும். மெத்தன போக்கு விலகும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. திருப்தி ஏற்படும் நாள். ஆபரணச் சேர்க்கை ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அனுக்கிரஹ விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,6
அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,R


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

### வீணாவின் கவிக்கணை

கலைந்த கனவுகள்
நிலைத்த துன்பங்கள்
பதறிய வாழ்க்கை
சிதறிய நெஞ்சம்
கதறிய உள்ளம்
கலங்கிய விழிகள்
சிதைந்தது போதும்
விழித்திடு மனமே
தடைகளை அகற்றி
நடைபோடு முன்னே
வெற்றிகள் வந்து
சேர்ந்திடும் உன் பின்னே!!!

2021 UTHAYAN உதயன்
25வது வெள்ளி விழா

# "மொழி வாரியத்தின் பணி தொடரும் : டான்ஸ்ரீ சோமா" "மலேசிய மண்ணை வணங்குகிறேன் : மதுரை எம்பி" "மொழி - இலக்கிய அறவாரியம் வாழ்க : பீர் முகம்மது"



- மலேசில மடல் -



கோலாலம்பூர், டிச.07:

தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம் 2010-இல் நிறுவிய "டான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் மொழி-இலக்கிய அறவாரிய"த்தின் 5-ஆவது பன்னாட்டு-உள்நாட்டு புத்தகப் பரிசுப் போட்டியில், மதுரைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் பன்னாட்டுப் பிரிவிலும் மூத்த இலக்கியவாதியும் படைப்பாளருமான சை.பீர்முகம்மது உள்நாட்டுப் பிரிவிலும் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவில் தமிழை வளர்ப்பதிலும் உள்நாட்டு-வெளிநாட்டுத் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும் கூட்டுறவு சங்கம் தொடர்ந்து முனைப்பு காட்டும் என்று ஐந்தாவது புத்தகப் போட்டி முடிவு குறித்து டான்ஸ்ரீ கே.ஆர்.சோமசுந்தரம் கருத்து தெரிவித்தார்.

2010-ஆம் ஆண்டில் மொழி-இலக்கிய அறவாரியம் அமைத்தபின் ஈராண்டுகளுக்கு ஒரு முறை பன்னாட்டு-உள்நாட்டு புத்தகப் போட்டி நடத்தப்படுகிறது. அந்த வகையில், 2020-ஆம் ஆண்டுக்குரிய 5-ஆவது போட்டி வெற்றியாளர் பரிசளிப்பு விழா கடந்த அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் நடைபெற்றிருக்க வேண்டும்.

கோவிட்-19 தாக்கத்தினால் பல்வேறு தடங்கல், தாமதத்திற்குப் பின் இந்தப் போட்டிக்கான வெற்றியாளரை அடையாளம் கண்டு அறிவிக்க முடிந்தாலும் இதன் தொடர்பில் வழக்கமாக நடைபெறும் விழாவை நடத்த முடியாமல் போனதாக டான்ஸ்ரீ கே.ஆர்.சோமசுந்தரம் தெரிவித்தார்.

முன்னதாக இந்தப் போட்டிக்கான நிறைவு நாள் 31-03-2020 என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் 18-03-2020 முதல் நாட்டில் நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டதாலும் உலகின் மற்ற நாடுகளிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டதாலும் போக்குவரத்து தடை உள்ளிட்ட பல்வேறு சிக்கலை கவனத்தில் கொண்டு இந்தப் போட்டிக்கான கடைசி நாள் ஒத்திவைக்கப்பட்டது.



ஆனாலும் ஆண்டிறுதிக்குள் இந்த நிகழ்ச்சி முற்றுபெற வேண்டும் என்பதை கவனத்தில் கொண்டு, வழக்கம்போல உள்நாட்டு-பன்னாட்டு நடுவர்கள் வழங்கிய தீர்ப்புகளின் அடிப்படையில் வெற்றியாளர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டனர்.

விழா நடத்த முடியாமல்போனது வருத்தமாக இருந்தாலும், அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்த விழா சிறப்பாக நடத்தப்படும். எது எவ்வாறாயினும், கூட்டுறவு சங்கத்தின் தமிழ்ப் பணி தொடரும் என்று டான்ஸ்ரீ சோமசுந்தரம் மேலும் தெரிவித்தார்.

பன்னாட்டுப் பரிசு வென்ற இலக்கிய ஆர்வலரும் படைப்பாளியும் அரசியல்வாதியுமான வெங்கடேசன் சுப்புராம், மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

உண்மையில் இந்தப் போட்டியைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் இயற்றிய "வீர யுக நாயகன் வேள்பாரி" நூலின் வெளியீட்டாளரான விகடன் பதிப்பகத்தார் போட்டிக்கான நூல்களை அனுப்பிவிட்டு எனக்கு தகவல் தந்தனர். இந்த நிலையில், எனக்கு முதல் பரிசு கிடைத்தது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது என்று வெங்கடேசன் மக்கள் ஓசை நாளிதழுக்கான சிறப்பு நேர்காணலில் தெரிவித்தார். (வீர யுக நாயகன் வேள்பாரி, ஆனந்த விகடன் இதழில் தொடராக ஆண்டுக் கணக்கில் வெளிவந்தது).

புலம் பெயர்ந்து வாழ்கின்ற மண்ணில், மலேசியவாழ் தமிழ்ச் சமூகம் பன்னாட்டு அளவில் தமிழ் எழுத்தாளர்களுக்காக இத்தகையப் போட்டியை நடத்துவதை எண்ணி மகிழும் அதேவேளை, அதில் நானும் கலந்து கொண்டு பரிசுபெறும் சூழல் அமைந்ததற்காக மிகமிக மகிழ்ச்சி அடைகிறேன். அப்படிப்பட்ட தமிழர்கள் வாழும் மலேசிய மண்ணை வணங்குகிறேன்.

மலேசியாவின் தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம் மேற்கொண்டுள்ள இந்த அரிய முயற்சி போற்றுதலுக்கு உரியது. இலக்கியப் படைப்பாளர்களுக்கு கிடைக்கும் பாராட்டும் பரிசும் அவர்களை இன்னும் எழுத ஊக்குவிக்கும். உலகெங்கும் பரந்து வாழும் தமிழினத்தின் பண்பாடு காக்கப்பட வேண்டுமென்றால், தமிழர்கள் எங்கிருந்தாலும் தங்களின் வேர்களை நோக்கிய கவனத்தைக் கொண்டிருக்க வேண்டும். படிப்பதில் தங்களை மீண்டும் மீண்டும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அதுதான், மூவாயிர ஆண்டுகளுக்கும் முற்பட்ட நம் தொல் பண்பாட்டு வேர்களைக் கண்டறிய உதவும் எழுதவும் தூண்டும் என்றார்.



கல்லூரி காலத்தில் இருந்தே இலக்கிய நாட்டமும் அரசியல் ஆர்வமும் கொண்டுள்ள இவர், "பாசி வெளிச்சத்தில்" என்னும் நூல் உட்பட நான்கு கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.

அதைப்போல "காலச் சக்கரத்தின் அரசியல்" என்னும் படைப்பு உட்பட ஆய்வு நூல்கள், குறு நூட்கள் என பத்து நூல்களை இயற்றியுள்ளார்.

நாவல்களைப் பொறுத்தவரை இவர் இயற்றிய இரு படைப்புகளுமே தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் சாதனைப் படைத்துள்ளன. "காவல் கோட்டம்" என்னும் முதல் நாவல் இந்தியாவின் முதல் நிலை இலக்கிய விருதான சாகித்ய அகடமியை வென்றுள்ள நிலையில், இரண்டாவது படைப்பு மலேசியாவின் டான்ஸ்ரீ கே.ஆர்.சோமா இலக்கிய அறவாரியத்தின் பரிசை வென்றுள்ளது.

பண மதிப்பு என்னும் வகையில், உலக அளவில் பெரிய பரிசு, மலேசியாவின் கூட்டுறவு சங்கம் வழங்கும் பரிசுதான் என்று தெரிவித்த வெங்கடேசன், மார்க்சிய பொதுவுடமைக் கட்சியிலிருந்து மு.க. ஸ்டாலின் தலைமை வகிக்கும் திமுக கூட்டணி சார்பில் இந்திய நாடாளுமன்றத்திற்கு தேர்வு பெற்றவர்.



என் தாயின் பெயர் நல்லம்மாள் மனைவி இராமகிருஷ்ணன்-ஜெயலெட்சுமி இணையரின் மகளான கமலா் எங்கள் மகள்களான யாழினியும் தமிழினியும் கல்லூரியில் பயின்று வருகின்றனர் என்று சுமார் பத்து மணி நேர போராட்டத்திற்குப் பின் தொலைபேசி இணைந்து அவசர அவசரமாகப் பேசிய வெங்கடேசன், கூட்டுறவு சங்கத்திற்கும் அதன் தலைவர் டான்ஸ்ரீ கே.ஆர்.சோமசுந்தரத்திற்கு நன்றி தெரிவித்து நிறைவு செய்தார்.

அவரைப் போல, உள்நாட்டுப் பிரிவில் "அக்கினி வளையங்கள்" என்னும் அரசியல் புதினத்திற்காக பரிசுபெற்ற முன்னாள் இராணுவ வீரரும் இந்நாள் இலக்கிய ஆளுமையுமான சை.பீர் முகம்மது, "உடல் நலத்தால் சற்று ஒய்ந்திருந்த என்னை, தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம் கண்ட டான்ஸ்ரீ கே.ஆர்.சோமா மொழி அறவாரியம், மீண்டும் எழுதும்படி என்னைத் தூண்டியுள்ளது" என்றார்.

ஜனவரி 11-ஆம் நாளில் 79 வயதை எட்ட இருக்கும் நிலையில், எனக்குக் கிடைத்த பிறந்த நாள் பரிசாக இதைக் கருதுகிறேன் என்ற பீர் முகம்மது, இனிப்பு நீர் பாதிப்புக்கு ஆளாகி கடந்த மார்ச் மாதத்தில் இருந்து வீட்டோடு இருந்து வருகிறார்.

மலாயாவில் அயலார் ஆதிக்கம் நிலவிய காலத்தில் இந்த மண்ணில் இயங்கிய பொதுவுடைமை இயக்க வரலாற்றின் அடிப்படையில் உண்மையையும் புனைவையும் கலந்து தென்றல் என்னும் பருவ இதழில் 48 வாரங்களாக இவர் எழுதிய அக்கினி வளையங்கள் என்னும் தொடர்தான் நூல் வடிவம் பெற்று, இப்போது இவருக்கு பரிசையும் பெற்றுத் தந்துள்ளது.

பரிசு கிடைத்த மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் பீர் முகம்மது, டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மொழி-இலக்கிய அறவாரியத்தின் தமிழ்த் தொண்டு பன்னாட்டு அளவில் புகழடைய வேண்டும் என்றார்.


தமிழ் மொழியில் தரம் வாய்ந்த இலக்கியப் படைப்புகள் மலேசியாவிலும் உலக நாடுகளிலும் வெளிவர வேண்டும் என்ற நோக்கில் நடத்தப்படும் இந்தப் போட்டியில் பன்னாட்டுப் பிரிவில் ஒரு வெற்றியாளரும் மலேசிய அளவில் ஒரு வெற்றியாளரும் ஒவ்வொரு போட்டியின்போதும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்று டான்ஸ்ரீ கே.ஆர்.சோமா மொழி-இலக்கிய அறவாரிய தலைமை இயக்குநர் டத்தோ பா.சகாதேவன் இதன் தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, இலங்கை நாடுகளில் இருந்து நான்கு நடுவர்களும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து ஒரு நடுவரும் என ஐந்து நடுவர்கள் இந்தப் போட்டிக்கான வெற்றியாளர்களைத் தேர்வு செய்து வருக்கின்றனர் என்று தெரிவித்த சகாதேவன், 2012-ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் போட்டியில் "திறனாய்வின் புதிய திசைகள்" என்ற படைப்பிற்காக ஈழ எழுத்தாளர் மு.பொன்னம்பலம் ஆயிர டாலரும் விடியல் என்ற நூலிற்காக மலேசியப் படைப்பாளி அ.ரெங்கசாமி ஆயிர வெள்ளியும் பரிசாகப் பெற்றனர் என்றார்.

அதைப்போல, 2014-ஆண்டு நடத்தப்பட்ட இரண்டாவது போட்டியில் பன்னாட்டுப் பிரிவில் "மூன்றாம் உலகப் போர்" என்ற நூலிற்காக தமிழகத்தின் கவிப்பேரரசு வைரமுத்துவும் மலேசியப் பிரிவில் "செலாஞ்சார் அம்பாட்" என்னும் படைப்பிற்காக கோ.புண்ணியவானும் பரிசுகளை வென்றனர்.

2016-ஆம் ஆண்டு மூன்றாவது போட்டியில் பன்னாட்டுப் பிரிவு, உள்நாட்டுப் பிரிவு ஆகிய இரண்டிலுமே மலேசியர்கள் வென்றனர். அழகான மௌனம் நூலிற்காக முனுசாமி கன்னியப்பன் பத்தாயிர டாலரும் காத்திருந்த விடியலுக்காக திருமதி. விமலா ரெட்டி பத்தாயிர வெள்ளியும் பரிசாகப் பெற்றனர்.

2018 நவம்பர் 17-ஆம் நாள் கூட்டுறவு சங்க தோட்ட மாளிகையில் நடைபெற்ற நான்காவது போட்டி பரிசளிப்பு விழாவில் பன்னாட்டுப் பிரிவில் "1801" என்ற நூலை இயற்றியதற்காக முனைவர் மு.இராஜேந்திரன்(ஐ.ஏ.எஸ்.) தேர்ந்தெடுக்கப்பட்டு பத்தாயிர டாலர் பணப்பரிசு, கேடயம்,



பாராட்டுப் பத்திரத்துடன் சிறப்பு செய்யப்பட்ட வேளையில் மலேசியப் பிரிவில் கௌரி சர்வேசனின் "புதிய பதிவுகள்" என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலுக்காக பத்தாயிர வெள்ளி வெகுமானத்துடன் சிறப்பு செய்யப்பட்டார் என்று சகாதேவன் இதன் தொடர்பில் தகவல் தெரிவித்தார்.

ஆனாலும் இலக்கிய உரை, பரிசு வென்ற நூல்களுக்கான ஆய்வுரை, நாடகக் காட்சி, விருந்தோம்பல், டான்ஸ்ரீ சோமா மொழி-இலக்கிய அறிவாரியத்தின் அடுத்த விழா தொடர்பான தகவல் என்றெல்லாம் நடைபெற்றிருக்க வேண்டிய ஓர் இலக்கிய மாலையைத் தவற விட்டதில் தமிழ் ஆர்வலர்களுக்கும் இலக்கிய நோக்கர்களுக்கு வருத்தம்தான்.

- நக்கீரன் (Nakkeeran): 013-244 36 24

*- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# #29 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

"முருகா செந்தூர் வாழ் செல்வகுமரா! அறுபடை வீடு கொண்டோனே! வேலெடுத்து வீசிக்காட்டி வீரர் வழி தோற்றுவித்த வீரனே! தமிழரின் தனித் தலைவனே! இளமையே!எழிலே! மறத்தமிழர் மரபு உலகெலாம் தழைத்தோங்க அமிழ்தினும் தமிழ் மொழி அறியாத எவருள்ளத்திலும் நின்று அருள் புரிவாய் அப்பனே" என வீரபாண்டியன் கட்டபொம்மனாக எம்முன் அவதாரமெடுத்துக் காட்சி கொடுத்த நடிகர் திலகம் அவர்களை இதயத்தில் நிறுத்தி வணங்குதல் செய்வோம்.



அன்புள்ள வாசகர்களுக்கும், பிரியமுள்ள சிவாஜி ரசிகர்களுக்கும் இனிய ஆங்கிலப்புத்தாண்டு (2021) நல்வாழ்த்துக்கள் எழுதி அனைவரையும் கூடவே என்னுடன் அழைத்துச் செல்கிறேன்.

இன்று ஜனவரி 3ஆம் நாள். இந்த நாளுக்குரிய வரலாற்றுப் பெருமை தான் என்ன! இன்றைக்கு 260 ஆண்டுகளுக்கு முன்பு ஜனவரி 3 ஆம் நாள் 1760 ஆம் ஆண்டு தான் நடிகர் திலகம் அவர்கள் அரிதாரம் பூசி தன் வாயிலாக இவன்தான் வெள்ளையனை எதிர்த்து வீர முழக்கமிட்ட வீர நாயகன் "வீரபாண்டிய கட்டபொம்மன்" என்று தமிழ் கூறும் நல்லுலகிற்கு அறிமுகம் செய்தும், உலகிற்கெல்லாம் எமது வரலாற்று நாயகனை அறிய அந்த மகா புரு'னின் பிறந்த நாளாகும்!

இனமான மொழிப் பற்றையும் - வீரத்தையும் தமிழர்களின் நாடி நரம்புகளில் செங்குருதியாகப் பாய்ச்சிய பெருமைக்குரிய நாயகனாகத் தோன்றிய நடிகர் திலகம் அவர்களை வணங்கி இவ்வாண்டுக்குறிய முதல் வார கட்டுரையை தொடர்கிறேன். சுமார் 260 ஆண்டுகளுக்குமுன் உயிருடன் வாழ்ந்த ஒரு வீரமறவன் ஆண்ட பூமி அது! அந்த மண்ணுக்கு தான் எத்தனை பெருமை! வீரத்தின் விளை நிலம் அது! பாஞ்சாலங்குறிச்சி!

பால பாடம் படிக்கும் ஒவ்வொரு குழந்தையும் உச்சரிக்க வேண்டிய ஒப்பற்ற மண்ணின் பெயர் இது! இப்போதும்கூட(?) அந்த பூமியில் பிறக்கும் ஆண் பிள்ளைக்கு சேனை வைக்கும்போது அந்த மண்ணை கலந்து பால் புகட்டும் பழக்கம் நடைமுறையில் உள்ளது. காரணம் அந்த மண்ணிலே ஆண்மைக்குறிய வீரமும் மானமும் உரமாகியுள்ளது! அதை ஊட்டி வளர்த்த மாவீரன் கட்டபொம்மன் பிறந்த பூமி! ஆண்ட பூமி! வெள்ளையனை எதிர்த்து முதல் முழக்கமிட்ட வீர மறவன் எங்களுக்கு அடையாளம் காட்ட பின்னாளில் அரிதாரம் பூசிய அந்த சிறுவனுக்கு அப்போது வயது ஏழு! கம்பளத்தார் என்று சொல்லப்படும் தெருக்கூத்து கலைஞர்கள் கிராமங்கள்தோறும் நாடகம் போடும் இந்தச் சிறுவன் கம்பளத்தாரின் தெருக்கூத்தான கட்டபொம்மன் கதையை மிக உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டும், அவர்கள் பாடி நடிப்பதை மனதில் பதிவு செய்து கொண்டும் இருந்தான்! வெள்ளைக்காரனுக்கெதிராக தேசத்துரோக வேலையில் ஈடுபட்டார் என்ற காரணத்திற்காக இச்சிறுவனின் தந்தை சிறையில் கைதியாகக் காலம் கழித்த போது பிறந்தவரே எமது கதாநாயகன்! எந்த வெள்ளையனை, கட்டபொம்மன் எதிர்த்துப் போராடி உயிர் நீத்தானோ அதே வெள்ளையன் பரம்பரையை எதிர்த்து சிறை சென்ற தனது தந்தையை நினைக்கும்போது அச்சிறுவனுக்கு இன்னொரு கட்டபொம்மன் உருவானான்!

தேசபக்தியையும்-வீரத்தையும்-விடுதலையுணர்வையும் தாய்வழி கேட்டுத் தந்தை வழி உள்வாங்கியதால்தான் எங்களுக்கு ஒரு வீரபாண்டிய கட்டபொம்மனை விடுதலைச் சிங்கத்தை அவனால் அறிமுகம் செய்துவைக்க கூடியதாகவிருந்தது. வீர சுதந்திரம் வேண்டி நின்று போராடிய தேசபக்தர்களையும் - தியாகிகளையும் மீண்டும் நினைக்க வைத்த தேசிய கலைஞர் திலகத்திற்கு வணக்கம் செய்வோம்!



கடந்த சில இதழ்களில் நடிகர் திலகம் அவர்களுடன் ஜோடி சேர்ந்து நடித்த மூத்த நடிகைகள், தலைமுறை நடிகைகள் சிலரை பற்றியும் அவர்கள் இணைந்து பங்களித்த சில காட்சிகளையும் நினைவுபடுத்தி எழுதி வந்தேன். அந்த வகையில் "அரங்கேற்றம்" பிரமிளா சிவாஜி அவர்களின் மருமகளாக "தங்கப்பதக்கம்" படத்திலும் மனைவியாக "கவரிமான்" படத்திலும் நடித்த காட்சிகளை நினைவு படுத்த விரும்புகிறேன்.

"தங்கப்பதக்கம்" சிவாஜி ஐயா ஏற்று நடித்த பாத்திரங்களுள் மிகச் சிறந்த போலீஸ் அதிகாரி இன்ஸ்பெக்டர் சௌத்ரியாக அவருக்கு புகழ் சேர்த்த பாத்திரமாகும். மனைவி கே ஆர் விஜயா இறந்த செய்தியைக் கேட்டவுடன் உயிர் அதிகாரியிடம் விடைபெற்றுச் செல்லுமிடம் அஞ்சாநெஞ்சம் கொண்ட அதிகாரியான அவரையே மனைவி பாசத்தால் ஆட்டம் காண வைத்த நெஞ்சையுருக்கும் காட்சியாகும்.

அவரைத் தவிர இன்னொரு நடிகர் இக்காட்சியில் இவரளவுக்கு செய்துகாட்டி விடமுடியாது. வீட்டுக்கு வருகிறார். மனைவியின் பிரிவு எண்ணி சோக கீதம் பாடுகிறார். "சோதனை மேல் சோதனை போதுமடா சாமி! வேதனை தான் வாழ்க்கையென்றால் தாங்காது பூமி! என கவியரசின் பாடலுக்கு உயிர் கொடுக்கிறார். பாடலின் இடையே மருமகள் பிரமிளா, "மாமா.. காய்ந்து போன பூமியெல்லாம் வற்றாத நதியைப் பார்த்து ஆறுதல் அடையும். நதியே காய்ஞ்சு போனால் துன்பப்படுறவங்கெல்லாம் அவங்க கவலைகளை தெய்வத்திடம் முறையிடுவாங்க! ....ஆனால் தெய்வமே கலங்கி நின்னா அந்த தெய்வத்துக்கு யாரால ஆறுதல் சொல்ல முடியும்"! எனச்சொல்லி துக்கம் மேலிட பொங்கியெழும் காட்சி சிவாஜிக்கு நிகரானவை.

இப்படி ஒரு காட்சி "தங்கப்பதுமை" படத்தில் நாட்டியப் பேரொளி பத்மினிக்கு "ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே" எனச் சிவாஜியுடன் இணைந்தது போல்... "பிரமீளா"விற்கு "தங்கப்பதக்கம்" படத்தில் அமைந்துவிட்டது.

ஆனால் "கவரிமான்" படத்தில் கணவன் சிவாஜிக்கு துரோகம் செய்யும் மனைவியாக மாறுவது அவரிடத்து வெறுப்பை உமிழும் அளவிற்கு அவருடைய காட்சி அமைந்துவிட்டது. "சந்தோசத்தை விலை கொடுத்து வாங்கினால் அது விபச்சாரம்! கட்டாயப்படுத்தி எடுத்துகிட்டா கற்பழிப்பு! பரிசாகக் கொடுத்தால்...." என தன்னை ரவிச்சந்திரனுக்கு பரிசாகக் கொடுக்கும் படுக்கையறை காட்சியை அங்கு எதிர்பாராமல் வந்த நாயகன் சிவாஜி பார்க்க நேரிடுகிறது!

துரோகத்தின் மொத்த உருவமாக உருவெடுத்த பிரமிளா தன்னை இன்னொரு ஆடவனுக்கு அனுபவிக்க கொடுக்கும் காட்சியைக் கண்ட சிவாஜியின் விழிகள் நெருப்பை உமிழ்கிறது, நாடி நரம்புகள் புடைக்கின்றன, முகத்தில் தசைநார்கள் பல்வேறு உணர்ச்சிகளை கொப்பளிக்கிறது. பெரிய இடத்து கணவன் ஆனபடியால் பெரிதாக சத்தம் எழுப்ப முடியவில்லை கால்களைத் தரையில் உதைத்து உதைத்து தனக்கு ஏற்பட்ட அவமானத்தால்.... கோபத்தின் உச்சிக்குப் போய்.... மனைவி பிரமிளாவின் மேல் பாய்கிறார். அவளது உயிர் பிரிகிறது. நடிகர்திலகத்தின் உணர்ச்சிப் பிழம்பான இந்த நடிப்பை அவரைத்தவிர யாரும் மெருகூட்டிருக்க முடியாது. ஏனெனில் அவர் ஒரு நடிப்பு பல்கலைக்கழக அகராதி.

*காட்சிகள் விரியும்... வீணை மைந்தன்.*


## ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம்

**அனைவருக்கும் எமது தைப் பொங்கல் நல் வாழ்த்துக்கள்.**

**நித்திய பூசைகள் இடம்பெறுகின்றன.**



3021 Markham Rd, Unit 45,46 & 47

Scarborough, Ontario M1X 1L8

Tel.No: (416) 293-1226

*ஆலயத்தில் பிரதி தினமும் செவ்வாய்க்கிழமைகளில் கட்டணமில்லாமல் இலவசமாக எலுமிச்சம் பழ விளக்கேற்றி அம்பாளை கூட்டு வழிபாடு செய்யும் நிகழ்ச்சி கடந்த 17 ஆண்டுகளாக நடைபெறுகிறது என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.*

குறிப்பு: ஐயா அவர்களால் சாதகம், பொருத்தம் பார்த்தல், பொதுப்பலன் சொல்லுதல், வியாபார விருத்தி, சாந்தி பரிகாரம் அனைத்தும் ஒழுங்கு செய்யப்படும்.

பிரம்மஸ்ரீ சந்திரமௌலி சாஸ்திரிகள்
ஆலய நிர்வாகம்

மலேசிய மடல்

# மலேசியக் கொடியை விண்வெளியில் நாட்ட நாட்டம் வான்மித்தாவின் எண்ணம் ஈடேறுமா?



### இன்றைய நேர்காணலின் முடிவில் தெரியும்



கிள்ளான், டிச.07:

**வி**ண்வெளி ஆய்வுத் துறை மாணவி வான்மித்தா, அமெரிக்காவின் கலி∴போர்னியாவில் வானியல் சார்ந்த உயர்க்கல்வியைத் தொடரப் போகிறாரா என்பது இன்று, இந்தப் பொழுதில் (மலேசிய நேரப்படி டிசம்பர் 07 விடியற்காலை 2:00 மணி) நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேர்காணல் முடிவில் தெரியவரும்.

பினாங்கு அறிவியல் பல்கலைக்கழகத்தில் விண்வெளி பொறியியல் துறை இளங்கலை இரண்டாம் ஆண்டு மாணவியான வான்மித்தா ஆதிமூலம், 2019-இல் பல்கலைக்கழகத்தில் சேர்ந்ததும் முதல் வேலையாக பல்கலைக்கழக அறிவியல் துறை மாணவர் சங்கத்தில் இணைந்து முனைப்புடன் செயல்பட்டதால், அந்த அமைப்பின் பொருளாளர் பதவியை எட்டி இருக்கிறார்.

தொடர்ந்து, கெடாவில் இயங்கும் ஏவுகனை குழுமத்திலும் இணைந்து, சிறிய அளவிலான ஏவுகனைத் தயாரிக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார். அதனை அடுத்து, மலேசிய விண்வெளி ஆராய்ச்சி முனையமான "சிஸ்வாசாட்" (SISWASAT) ஏற்பாடு செய்த பயிற்சியிலும் பங்கு கொண்டு, தன் விண்வெளி ஆராய்ச்சிக் கல்வியை மேம்படுத்திக் கொண்டிருக்கிறார் கிள்ளான், சிம்பாங் லீமா தமிழ்ப் பள்ளி மாணவியான இவர்.

கிள்ளான், மெதடிஸ்ட் பெண்கள் இடைநிலைப் பள்ளிக் கல்விக்குப் பின், கிளந்தான் மெட்ரிக்குலேஷன் கல்லூரியில் படித்த காலத்திலேயே விண்வெளி சம்பந்தபட்ட தேடலில் வான்மித்தா ஈடுபட்டிருக்கிறார்.

இதற்கிடையில், சர்வதேச விண்வெளி கூட்டமைப்பு ஏற்பாடு செய்த "நாசா விண்வெளி சவால்-2019" என்னும் நிகழ்ச்சியில் தன்னார்வலராகக் கலந்து கொண்டதன் அடிப்படையில், "நாசா விண்வெளி சவால்-2020" நிகழ்ச்சியிலும் பங்கேற்பளராகக் கலந்து கொள்ள கடந்த அக்டோபர் மாதத்தில் வான்மித்தாவிற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால், கொரோனா பாதிப்பினால் எந்த நிகழ்ச்சியிலும் நேரடியாகக் கலந்து கொள்ள முடியாத நிலையில், இணையத்தின் மூலம் பங்கு கொண்டிருக்கிறார்.

தொடர்ந்து "விண்வெளித் தலைமுறை ஆலோசனைக் குழு" என்னும் பன்னாட்டு அமைப்பு ஐநா மன்றத்துடன் இணைந்து நடத்திய கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார்.

அதற்கடுத்து, அமெரிக்காவின் "அட்வான்சிங் எக்ஸ்" என்னும் விண்வெளிக் கல்வி சார்ந்த அமைப்பு நடத்திய போட்டியிலும் கலந்து கொண்டிருக்கிறார். இந்தப் போட்டி, அமெரிக்காவில் ஐந்து ஆண்டுகள் விண்வெளித்துறையில் படிப்பதற்கான போட்டி.

இதில் போட்டி நான்கு கட்டங்களைக் கொண்டது. முதல் கட்டத்தில் கட்டுரைப் படைக்க வேண்டும். அடுத்து ஒரு காணொளியைத் தயாரிக்க வேண்டும். மூன்றாவதாக, தன்னுடைய விண்வெளிக் கல்விப் பயணம் தொடர்பான ஆதரவு நிலையை நிரூபிக்க வேண்டும். நிறைவாக நேர்காணம் இடம்பெறும்.

பல கட்டங்களில் தேக்க நிலையை எதிர்கொண்டாலும் சளைக்காத வான்மித்தா இடையிடையில் எதிர்மறையான விமர்சனங்களையும் சந்தித்திருக்கிறார்.

இருந்தபோதும் இவரின் ஜெர்மன் நாட்டு வழிகாட்டி எலிதெரியோஸ், மலேசிய விண்வெளி வீராங்கனை வனஜா, விரிவுரையாளர் முனைவர் பிரேமா ஆகியோரின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை் பெற்றோர், அண்ணன்கள், அண்ணி, நண்பர்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்று தற்பொழுது இந்த நிலையை எட்டி இருக்கிறார்.







இதன் தொடர்பில்தான் இப்பொழுது நேர்காணலில் கலந்து கொண்டிருக்கிறார். இதற்கான முடிவு மூன்று மாதங்களுக்குப் பின் தெரியவரும். அப்போதுதான், மலேசியத் திருநாட்டின் கொடியை விண்வெளியில் நாட்ட வேண்டும் என்னும் தன்னுடைய கனவை நிறைவேற்றுவதற்கான கல்வியையும் பயிற்சியையும் அமெரிக்காவில் தொடங்கப் போகிறாரா என்ற விவரம் தெரியவரும்.

**- நக்கீரன்** (Nakkeeran)**: 013-244 36 24**

# வானியல் அறிவியல் மேதை கலீலியோ நினைவு நாள்

### பேய் ஓட்டுதலுக்கும் வீட்டுச் சிறைக்கும் ஆளான அறிவியல் மேதை: கலீலியோ

"**இ**துவரை நாமெல்லாம் நம்பிக் கொண்டிருந்ததைப் போல இந்தப் பூமி, தட்டையானதல்ல் அதைப்போல, பூமியை 12 இராட்சச தூண்கள் தாங்கிக் கொண்டு இருக்கின்றன என்பதும் உண்மையல்லை. மாறாக, இந்தப் புவி கோள வடிவிலானது. அத்துடன், இது ஓரிடத்தில் நிற்பதுமில்லை நிலைப்பதும் இல்லை மாறாக, சூரியனை சுற்றி வருகிறது. அவ்வாறு சூரியனை சுற்றி வரும்பொழுது, தன்னைத் தானேயும் வலப்புறமாக சுற்றிக் கொள்கிறது" என்று சொன்ன வானியல் அறிவியல் மேதை கலீலியோவை அதற்கு மேல் பேச விடாத 17-ஆம் நூற்றாண்டு மதவாதிகள், அவருக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்று முத்திரைக் குத்தினர்.



பூமி ஒரு முறை சூரியனை சுற்றிவர எடுத்துக் கொள்ளும் காலத்தைதான் ஓர் ஆண்டு என்கிறோம் மேலும் பூமியானது காலம் தப்பாமல் தன்னைத் தானேயும் சுற்றிக் கொள்கிறது. அதற்கான கால அளவைத்தான் ஒரு நாள் என்கிறோம் என்றெல்லாம் வானியல் சார்ந்த உண்மைத் தகவலை ஒவ்வொன்றாக கலிலியோ வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

அதனால் வெறுப்படைந்த மதவாதிகளும் திருச்சபைக் கூட்டத்தினரும் ஒன்று சேர்ந்து, "கலிலியோ திருந்துவதைப் போல தெரியவில்லை. சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்வதால் இவருக்குப் பேய் பிடித்து விட்டது. இனியும் கலிலியோவை விட்டு வைத்தால் அவரைப் பிடித்துள்ள பேய் ஊர் மக்களையும் ஆட்கொள்ளும் என்பதால் உடனே அந்தப் பேயை ஓட்ட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்டவனுக்கும் சமயத்துக்கும் எதிரான கருத்தை சொல்லிக் கொண்டு பாவக் கணக்கை ஏற்றிக்கொண்டே இருக்கிறார். இதற்கெல்லாம் ஒரேத் தீர்வு கலிலியோவைப் பீடித்துத்துள்ள பேயை விரட்டுவதுதான் என்று முடிவெடுத்த மதவாதிகள் கலீலியோவை, அவர் பிறந்த இத்தாலி, ∴பீசா நகரத்து தேவாலயத்தின் நுழைவாயில் அருகே கட்டிப்போட்டு பேய் ஓட்டும் சடங்கை நடத்தியுள்ளனர்.

கலீலியோ வாழ்ந்த காலம் வானியல், பூமி அமைப்பு யாவும் மதத்துடன் பின்னிப்பிணைந்திருந்தது. பூமிதான் அண்டத்தின் மையம் என்றும் அதனைச் சுற்றித்தான் பிற கோள்கள் வலம் வருகின்றன என்றும் கூறப்பட்டு அது மத நம்பிக்கையாகவும் பின்பற்றப்பட்டு வந்தது. புதிய சிந்தனையை யார் வெளிப்படுத்தினாலும் அவை மதத்திற்கு எதிரானவை என குற்றம் சுமத்தப்பட்டு தண்டிக்கப்பட்டனர். இந்த நிலை ஏறக்குறைய 1500 ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வந்தது.

பேய் ஒட்டும் சடங்கு நிறைவேறிய பின்னும் அவரை விட்டுவிடாமல், சமயத்துக்கும் மதநம்பிக்கைக்கு எதிராகச் செயல்பட்டதாக குற்றம் சுமத்தி அன்றைய கத்தோலிக்க திருச்சபையினர், 1633-ம் ஆண்டு முதல் கலீலியோ 1642-ம் ஆண்டில் இருதயக் கோளாறு காரணமாக இறக்கும் வரை வீட்டுச்சிறையில் அடைத்தனர்.

கலீலியோ சிறைவைக்கப்பட்ட ஒன்பதாண்டுக் காலத்தில்தான் பொருள்களின் இயக்கம் குறித்த சோதனைகளை (Motion Of Experiments) எழுதி வைத்தார். அவரின் குறிப்புகள் அறிவியலின் மறுமலர்ச்சிக்கு பெரிதும் துணையாக இருந்தது. அத்தகைய மேதைக்கு ஜனவரி 8 நினைவு நாள்.

இந்த இத்தாலிய மேதைதான் அறிவியலின் மறுமலர்ச்சிக்குக் காரணம். முதலில் கணிதம்மீது ஆர்வம்கொண்ட இவர் மெல்ல மெல்ல வானியல் மேல் ஆர்வம்கொண்டு வானியல் ஆய்வுகளை மேற்கொண்டார். கலீலியோவின் ஆய்வுக்கு அவரே உருவாக்கிய தொலைநோக்கிக் கருவி பெரிய உதவியாக அமைந்தது. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொலைநோக்கிக் கருவியைக் கண்டுபிடித்த அறிவியல் மேதையும் இவர்தான்.

1610-இல் சனிக் கோளை சுற்றியுள்ள வளையத்தைக் கண்டுபிடித்த இவர்தான் நெப்டியூன் கோளையும் கண்டறிந்தார்.

புவிமையக்கோட்பாட்டை உருவாக்கிய கலீலியோ பிறந்த நேரத்தில் ∴ப்ளோரன்ஸ் என்னும் மன்னன் இத்தாலியை ஆண்டு வந்தார். ஆனால், தெளிவும் ஞானமும் பெற்ற பிந்தைய சமயவாதிகள் கலீலியோவிற்கு இழைத்த அநீதிக்காக வருந்தினர்.

வாட்டிகன் நகரத்து போப்பாண்டவர்கூட, 1992-இல், கலிலியோ மறைந்து 350 ஆண்டுகள் கழித்து கலிலியோவைத் தண்டித்தது தவறு என ஏற்றுக் கொண்டு மன்னிப்புக் கோரினார். அறிவியல் உண்மைகள் அவை வெளியிடப்படும் காலத்தில் ஏற்கப்படாவிட்டாலும், என்றாவது ஒரு நாள் ஏற்கப்படும் என்பதற்கு கலிலியோவின் வாழ்க்கை ஓர் உதாரணம்.

**- நக்கீரன்** (Nakkeeran)**: 013-244 36 24**

# ஈழத்துத் திருக்கோவில்கள் 928



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## கந்தவனம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில்
### பொலிகண்டி, யாழ்ப்பாணம்

'' நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென்செயுங்கொடுங் கூற்றென் செயுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன்னேவந்து தோன்றிடினே. ''

முருகு என்ற சொல் தமிழில் அழகு, இளமை, மணமுடமை, தெய்வத்தன்மை ஆகியவற்றைக் குறிக்கும், பொருள் பொதிந்த சொல்லாகக் காணப்படுகின்றது. சேய், சேயோன், செவ்வேள், கவின், சேந்தன், முருகன், கந்தன், சரவணன், சுப்ரமணியன், கார்த்திகேயன், ஆறுமுகன் எனப் பல காரணப் பெயர்களால் முரு-கனை அழைத்துள்ளனர். சங்ககாலத்திலே குறிப்பிடப்பட்ட குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களுள் ஒவ்வொரு நிலங்களுக்கும், ஒவ்வொரு முதன்மைத் தெய்வத்தைக் குறிப்பிடும் வழக்கம் காணப்பட்டுள்ளது.

“சேயோன் மேய மைவரை உலகமும்” என்ற தொல்காப்பியக் குறிப்பிலிருந்து முருகன், குறிஞ்சி நிலத் தெய்வமாகப் போற்றப்பட்டமை தெளிவாகின்றது. சங்க இலக்கியங்களுள் பத்துப்பாட்டில் முதலாவதாக திருமுருகாற்றுப்படை அமைந்துள்ளது. பக்தி உணர்வை வெளிப்படுத்தும் நூலாக இந்நூல் போற்றப்படுகின்றது. இந்நூலிலே “விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ” என்று முருகனைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

பத்துப்பாட்டிலே ஒன்றான மலைபடுகடாம் என்ற நூல், “வெல்லும் போரை வல்ல முருகன்” என்று குறிப்பிட்டுள்ளது. பகைகளை வெல்லும் போ-ர்க் கடவுளாகவும், எண்ணிய கருமங்களை வெற்றிபெற வைப்பவனாகவும் முருகன் போற்றப்பட்டுள்ளதையே, மலைபடுகடாம் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. முருகன் உதித்த வரலாற்றினை எடுத்தியம்புவது கந்தப்புராணம். இது 14 ஆம் நூற்றாண்டிலே இயற்றப்பட்டது. தமிழர்கள் வாழ்வில் இன்னல்களும், அச்சுறுத்தல்களும் காணப்படும் வேளைகளில், அவற்றை எதிர்நோக்கிப் போராடும் மனத்துணிவினையும், ஆற்றலையும் கந்தப்புராணம் அளிக்கின்றது.

வைதிக மதங்களிடையே போட்டி ஏற்பட்டு இந்துசமயம் நிலைகுலைந்து காணப்பட்டபோது, சமய ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டி, முருக வழிபாடு மறுமலர்ச்சி பெற்றது. அருணகிரிநாதரின் திருப்புகழ், கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி போன்றவை இப்பணிணைச் செய்தன. அன்றுதொட்டு பாரதியார்வரை முருகனை ஏற்றிப்போற்றாதார் இல்லையென்றே கூறலாம். சமய வரலாற்றிலே முருகன், சிவன் பார்வதியுடைய இளையபிள்ளையாகக் கூறப்பட்டுள்ளான். தந்தைக்கு மந்திர உபதேசமளித்த முருகனை, தகப்பன்சாமி என்று தமிழ் மக்கள் ஏற்றிப் போற்றுவர்.

இத்தகைய தொன்மையான முருக வழிபாடு, ஈழத்திலே இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, முக்கியத்துவம் பெற்று விளங்கியுள்ளது. இதற்கு ஆதாரமாக ஆதிச்ச நல்லூரிலே நிகழ்தப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சிகளும், சங்கத் தமிழ் இலக்கியங்களிலே காணப்படுகின்ற செய்திகளும் சான்றாகக் காணப்படுகின்றன.

ஈழத்தின் ஒவ்வொரு பிரதேசத்திலும் முருகவழிபாடு காணப்படுகின்றது. ஈழத்திலே ஏறக்குறைய இருநூற்றுக்கு மேற்பட்ட முருகன் கோயில்கள் காணப்படுகின்றன. வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் குமரக் கடவுள் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருப்பதிகள் பலவற்றுள், தட்சிணகைலாயமான்மியம் ஒன்பதாம் அத்தியாயத்தில் ஆறு திருப்பதிகள் விதந்து கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்டுள்ள ஈழநாட்டிலுள்ள திருப்பதிகள் ஆறினுள் ஒன்றாக விளங்குவது, பொலிகண்டி கந்தவனக் கடவை அருள்மிகு சுப்ரமணிய சுவாமி கோயிலாகும்.

இலங்கைத் திருநாட்டின் வடபால் வடமராட்சியில் பொலிகண்டி என்னும் சிற்றூரிலே, கடலோரம் மிகவும் பழமை வாய்ந்ததும், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புக்களும் ஒருங்கே அமையப் பெற்றதுமான திருக்கோயிலாக, பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் கோயில் காணப்படுகின்றது. இப் பெரும்பதியில் “கல்யாணவேலன்” என்னும் திருநாமத்தோடு அடியவர்க்கு அருள்பாலிக்கின்றார் கந்தவனநாதன்.

இவ்வாலயம் மிகவும் பழமை வாய்ந்தது. முருகன் தனது தேவி-யரோடு கைலையங்கிரியிலிருந்து புறப்பட்டு வேதாரணியத்தை அடைந்து, பின் மரக்கலமூடாக காங்கேயன் துறையைச் சேர்ந்து, அங்கிருந்து கந்தவனப்பதியை வந்தடைந்து, தேவர்களின் பூசை வழிபாட்டை ஏற்று மகிழ்ந்து, பின் கதிர்க-ாமம் சென்றடைந்தார் என்று தட்சிண கைலாய மான்மியத்திலே சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் புகழும் அருளும் மிக்க கோயில்களாக பல முருகன் கோயில்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சிக்கல் சிங்கார வேலன், எட்டிகுடி வேலன், எண்கண்வேலன், இலங்கையில் கந்தவனத்துக் கலியாண வேலன் என்னும் நான்கு சண்முக மூர்த்திகளும், இந்தியாவிலுள்ள ஒரே சிற்பியால் உருவாக்கப்பட்டு, வேறெங்கும் காணமுடியாத சிறப்புடன் அந்தந்தக் கோயிலின் மூல மூர்த்திகளாக எழுந்தருளி அருள்பாலிக்கின்றன.

*வளரும்...*






# Carefirst Family Health Team

## *Accepting New Patients*



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

**300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2**

**Tel: (416) 502-2029, www.carefirstfht.com**



# அன்பின் தொனி - 593

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**என் ஜனங்களே, என் உபதேசத்தைக் கேளுங்கள்.**

என் ஜனங்களே, என் உபதேசத்தைக் கேளுங்கள், என் வாயின் வசனங்களுக்கு உங்கள் செவிகளைச் சாயுங்கள். என் வாயை உவமைகளால் திறப்பேன், பூர்வகாலத்து மறைபொருள்களை வெளிப்படுத்துவேன். அவைகளை நாங்கள் கேள்விப்பட்டு அறிந்தோம், எங்கள் பிதாக்கள் அவைகளை எங்களுக்குத் தெரிவித்தார்கள். பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல், கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம். அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து, அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டார். இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்துகொண்டு, அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும், தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்து, தேவனுடைய செயல்களை மறவா மல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும், இருதயத்தைச் செவ்வைப்படுத்தாமலும், தேவனை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளாமலும் இருந்த முரட்டாட்டமும் கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள் பிதாக்களுக்கு அவர்கள் ஒப்பா காதபடிக்கும், இவைகளைக் கட்டளையிட்டார். ஆயுதமணிந்த வில்வீரரான எப்பிராயீம் புத்திரர் யுத்தநாளிலே முதுகு காட்டினார்கள். அவர்கள் தேவனுடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளாமலும், அவருடைய கட்டளைகளின்படி நடக்கச் சம்மதியாமலும், அவருடைய செயல்களையும், அவர் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்களையும் மறந்தார்கள். அவர்களுடைய பிதாக்களுக்கு முன்பாக, எகிப்து தேசத்துச் சோவான் வெளியிலே, அவர் அதிசயமா-னவைகளைச் செய்தார். கடலைப் பிளந்து, அவர்களைக் கடக்கப்பண்ணி, ஜலத்தைக் குவியலாக நிற்கும்படி செய்தார். பகலிலே மேகத்தினாலும், இராமுழுதும் அக்கினி வெளிச்சத்தினாலும் அவர்களை வழிநடத்தினார். வனாந்தரத்திலே கன்மலைகளைப்பிளந்து, மகா ஆழங்களிலிருந்து தண்ணீரை அவர்களுக்குக் குடிக்கக்கொடுத்தார். கன்மலையிலிருந்து நீரோட்டங்களைப் புறப்படப்பண்ணி, தண்ணீரை நதிபோல ஓடிவரும்படி செய்தார். என்றாலும், அவர்கள் பின்னும் அவருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, வறண்ட வெளி-யிலே உன்னதமானவருக்குக் கோபம் மூட்டினார்கள். தங்கள் இச்சைக்கேற்ற போஜனத்தைக் கேட்டு, தங்கள் இருதயத்தில் தேவனைப் பரீட்சைபார்த்தார்கள். அவர்கள் தேவனுக்கு விரோதமாய்ப் பேசி: தேவன் வனாந்தரத்திலே போஜனபந்தியை ஆயத்தப்படுத்தக்கூடுமோ? - **சங்கீதம் 78: 1-19**

**தூதர்களின் அப்பத்தை மனுக்ஷன் சாப்பிட்டான்**

இதோ அவர் கன்மலையை அடித்ததினால் தண்ணீர் புறப்பட்டு, நதிகளாய்ப் புரண்டு வந்தது, அவர் அப்பத்தையும் கொடுக்கக்கூடுமோ? தம்முடைய ஜனத்திற்கு மாம்சத்தையும் ஆயத்தப்படுத்துவாரோ? என்றார்கள். ஆகையால் கர்த்தர் அதைக் கேட்டுக் கோபங்கொண்டார், அவர்கள் தேவனை விசுவாசியாமலும், அவருடைய இரட்சிப்பை நம்பாமலும் போன தினா-ல், யாக்கோபுக்கு விரோதமாய் அக்கினி பற்றியெரிந்தது, இஸ்ரவேலுக்கு விரோதமாய்க் கோபம் மூண்டது. அவர் உயரத்திலுள்ள மேகங்களுக்குக் கட்டளையிட்டு, வானத்தின் கதவுகளைத் திறந்து, மன்னாவை அவர்களுக்கு ஆகார மாக வருஷிக்கப்பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார். தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப் பிட்டான், அவர்களுக்கு ஆகாரத்தைப் பூரணமாய் அனுப்பினார். ஆகாசத்திலே கீழ்காற்றை வரப்பண்ணி, தம்முடைய வல்லமையினால் தென்றலையும் வீசச்செய்து, மாம்சத்தைத் தூ ளத்தனையாயும், சிறகுள்ள பறவைகளைக் கடற்கரை மணலத்தனையாயும் வருஷிக்கப்பண்ணி, அவைகளை அவர்கள் பாளயத்தின் நடுவிலும், அவர்கள் கூடாரங்களைச் சுற்றிலும் இறங்கப்பண்ணினார். அவர்கள் புசித்துத் திருப்தியடைந்தார்கள், அவர்கள் இச்சித்ததை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் தங்கள் இச்சையை வெறுக்கவில்லை, அவர்களுடைய போஜனம் அவர்கள் வாயில் இருக்கும் போதே. தேவகோபம் அவர்கள்மேல் எழும்பி, அவர்களில் கொழுத்தவர்களைச் சங்கரித்து, இஸ்ரவேலில் விசேஷித்த வர்களை மடியப்பண்ணிற்று. இவையெல்லாம் நடந்தும், அவர்செய்த அதிசயங்களை அவர்கள் நம்பாமல், பின்னும் பாவஞ்செய்தார்கள். ஆதல-ால் அவர்கள் நாட்களை விருதாவிலும், அவர்கள் வருஷங்களைப் பயங்கரத்திலும் கழியப் பண்ணினார். அவர்களை அவர் கொல்லும்போது அவரைக்குறித்து விசாரித்து, அவர்கள் திரும்பிவந்து தேவனை அதிகாலமே தேடி, தேவன் தங்கள் கன்மலையென்றும், உன்னதமான தேவன் தங்கள் மீட்பர் என்றும், நினைவுகூர்ந்தார்கள். ஆனாலும் அவர்கள் தங்கள் வாயினால் அவருக்கு இச்சகம்பேசி, தங்கள் நாவினால் அவரிடத்தில் பொய்சொன்னார் கள். அவர்கள் இருதயம் அவரிடத்தில் நிலைவரப்படவில்லை, அவருடைய உடன்படிக்கையில் அவர்கள் உண்மையாயிருக்கவில்லை. அவரோ அவர்களை அழிக்காமல், இரக்கமுள்ளவராய் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்தார், அவர் தமது உக்கிரம் முழுவதையும் எழுப்பாமல், அநேகந்தரம் தமது கோபத்தை விலக்கிவிட்டார். அவர்கள் மாம்சமென்றும், திரும் பிவராமல் அகலுகிற காற்றென்றும் நினைவுகூர்ந்தார். எத்தனைதரமோ வனாந்தரத்திலே அவருக்குக் கோபம் மூட்டி, அவாந்தரவெளியிலே அவரை விசனப்படுத்தினார்கள். அவர்கள் திரும்பி தேவனைப் பரீட்சை பார்த்து, இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தினார்கள். - **சங்கீதம் 78: 20-41**

**கர்த்தர் தம்முடைய ஜனங்களை ஆடுகளைப்போல் புறப்படப்பண்ணினார்**

அவருடைய கரத்தையும், அவர் தங்களைச் சத்துருவுக்கு விலக்கி மீட்ட நாளையும் நினையாமற்போனார்கள். அவர் எகிப்திலே தம்முடைய அடையாளங்களையும், சோவான் வெளியிலே தம்முடைய அற்புதங்களையும் செய்தார். அவர்களுடைய நதிகளை இரத்தமாக மாற்றி, அவர்களுடைய ஆறுகளிலுள்ள ஜலத்தைக் குடிக்கக்கூடாதபடி செய்தார். அவர்களை அழிக்கும்படி வண்டு ஜாதிகளையும், அவர்களைக் கெடுக்கும்படி தவளை-களையும் அவர்களுக்குள்ளே அனுப்பினார். அவர்களுடைய விளைச்சலைப் புழுக்களுக்கும், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை வெட்டுக்கிளிகளுக்கும் கொடுத்தார். கல்மழையினால் அவர்களுடைய திராட்சச்செடிகளையும், ஆலாங்கட்டியினால் அவர்களுடைய அத்திமரங்களையும் அழித்து, அவர்களுடைய மிருகஜீவன்களைக் கல்மழைக்கும், அவர்களுடைய ஆடுமாடுகளை இடிகளுக்கும் ஒப்புக்கொடுத்தார். தமது உக்கிரமான கோபத்தையும், மூர்க்கத்தையும், சினத்தையும், உபத்திரவத்தையும், தீங்குசெய்யும் தூாதர்களையும் அவர்களுக்குள்ளே அனுப்பினார்.
- **சங்கீதம் 78: 42-49**

*தொடரும்...*


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS C R PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

**நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்**

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

**நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்**

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# குடும்ப விளக்கின்
# இரண்டாம் ஆண்டு நினைவு நாள்



அன்னை மடியில்:
15
-
09
-
1961

ஆண்டவன் அடியில்:
11
-
01
-
2019



அழகென்ற சொல்லுக்கு குமரா
இன்பமும், துன்பமும் நிறைந்த எம் வாழ்வில்
உன்னை நினைக்காத நாளில்லை என்றும்
மனமார நினைந்து வாழ்நாளில் உனை நினைந்து
காலனவன் கவர்ந்திட்ட நேரமதில்
உன்னை வீழ்த்தும் விதிகள் எழுதப்பட்டிருந்தால்
விதிகளை வீழ்த்தும் அளவிற்கு எங்களின் பலம்
போய்விட்டதே
ஞானமதில் பிறந்திட்ட உன் புகழை நாம்
இவ் நானிலமே பயன் பெறவே நடந்தாயே
கடல் கடந்து நீ சென்று நாம் வாழ வழிவகுத்தாய்
இன்றும், என்றும் உன் நினைவு அழியாது
மனங்களில் நிறைந்தீர் மாசற்ற மனிதராய் உணர்ந்தோம்
மனதை ஈர்ந்தவராய் பாராட்டு பெற்று
பதவி உயர்வுகள் தேடி வந்தன
சினம் கொள்ளல் உம்மிடத்தில் சிறிதளவும் இல்லை
சீரான் உடைகள் சிங்கார நடை சிரித்த முகத்தோடு செந்நிற
மேனி சீக்கிரம் பொருந்திடும் நட்பு வட்டங்கள் நடுவே
சிகரமாய் இருந்தீரே
குதூகலம் நிறைந்து கொண்டாடி மகிழ்ந்தவை இனி
வருமோ
ஏங்கி நிற்க்கும் நாம் உன் பாத கமலத்தை பூசித்து
வணங்கவோம்
எங்கிருந்தாலும் அனைவரையும் வாழ்த்துவாய் என்று
வாயாற புகழ்வோம்

திதி: 19-12-2020



## திரு. சத்தியசீலன் சத்தியகுமார் (குமார்)

(யாழ். சுருவில் ஐயனார் கோவிலடி, கனடா)

11-01-2021 அன்று வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள அகிலாண்டேஸ்வரி அருளகத்தில் உள்ள சிறார்கள், பெரியவர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படும்.

**என்றும் உன் நினைவுடன் வாழும்**
**குடும்ப உறவுகள்**

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LiFe Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20% Government Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Broker
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

25 வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
(BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
PARK PLAZA
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
UTHAYAN உதயன்
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1292 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 8, 2021

# “போர்க் குற்றச்சாட்டுக்கு ஆளானவரை“ தூதராக ஏற்க வேண்டாம்: கனடிய அரசுக்கு தமிழ் அமைப்பு வலியுறுத்தல்

போர்க் குற்றச்சாட்டுக்கு ஆளான நபரை தமது நாட்டுக்கான இலங்கைத் தூதராக ஏற்க வேண்டாம் என்று உள்ளூர் செயற்பாட்டுக் குழுவொன்று கனடியப் பிரதமரை வலியுறுத்தியுள்ளது. (உள்ளே தொடர்ச்சி 10ம் பக்கம்)

# ஸ்காபுறோ Tendercare முதியோர் இல்லத்தில் மேலும் மரணங்கள் சம்பவித்தது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் கவலை தெரிவிப்பு

ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள Tendercare முதியோர் இல்லத்தில் ஏற்கெனவே பல மரணங்கள் சம்பவித்த நிலையில் மேலும் அதிகளவு மரணங்கள் சம்பவித்தது தொடர்பாக அரசியல் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கம்)

# அரசியல் கைதிகள் பொங்கல் தினத்திற்கு முன் விடுதலை செய்யப்பட வேண்டும்

தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரி மக்கள் இன்று வியாழக்கிழமை முதல் எதிர் வரும் 14 ஆம் திகதி வரை பொது இடம் மற்றும் இறை பிரார்த்தனை இடம் பெறும் இடங்களில் மஞ்சல் மற்றும் கருப்பு நிற தோரணங்களை பறக்க விட்டு இறை பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் குழுமத் தலைவர் ஜே.ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார். (தொடர்ச்சி உள்ளே. 17.ம் பக்கம்)

# ஈழத்தமிழர்களுக்கு, குற்றவாளியே நீதி வழங்குவதா? என கண்டனம் தெரிவிக்கிறார் பழ. நெடுமாறன்

தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில், இலங்கையில் வாழும் சிறுபான்மையினரான தமிழர்களுக்கான உரிமைகளை வழங்குவது, அவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வது, சமத்துவத்தை ஏற்படுத்துவது உள்ளிட்ட விவகாரங்களில் அந்நாட்டு அரசே முடிவெடுக்கவேண்டும். (தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கம்)

# தமிழ்மக்களுக்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகளையே மீண்டும் கொடுத்துவிட்டு திரும்பிய இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கர்!



‘பிச்சை வேண்டாம் நாயைப் பிடி’ என்ற பழமொழிக்கு ஒப்ப 13 ஏ போதாது அந்தத் திருத்தச் சட்டம் மேம்படுத்தப்பட்டு மத்திய அரசுக்குள்ள அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு பகிரப்பட வேண்டும் என்றும் ஏற்கனவே பகிரப்பட்ட காணி அதிகாரம், பொலீஸ் அதிகாரம் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் என்றும் தமிழர் தரப்பு நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் குரல் எழுப்பி வருகிறது. இலங்கை அரசு சமத்துவத்தின் அடிப்படையில் (equality) – நீதியின் அடிப்படையில் (justice) – கௌரவத்தின் (dignity) அடிப்படையில் – சமாதானத்தின் (peace) அடிப்படையில் ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டுமென்று வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் திரு சம்பந்தன் போன்றோர் இடித்துரைக்-கிறார்கள். (தொடர்ச்சி உள்ளே. 12ம் பக்கம்)

# ‘கருணா’வை பகிஸ்கரிக்க ஊடகங்களோ அல்லது ‘வன்னி’ மண்ணின் எதிர்ப்பைக் காட்ட ஒரு சிலரோ அன்று முன்வந்திருக்க வேண்டுமல்லவா?

*- விசாகன் வினாவுகின்றார்*



இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த பேரினவாத அரசுகளின் நீதியற்ற ஆட்சி முறை மற்றும் உயர் கல்வியிலும் அரச உத்தியோகம் பெறுவதிலும் காட்டப்பட்ட அநீதி, மற்றும் அடக்குமுறை ஆகியவற்றை சகித்துக் கொள்ள முடியாது பத்துக்கும் உட்பட்ட இளைஞர்களால் ஆரம்பிக்கப்பெற்ற தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டம் எதிர்பாராத வளர்ச்சி பெற்றது.

ஒன்றிக்கு மேற்பட்ட விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்றாலும், தனித்தனியாக வெற்றிகள் ஈட்டப்பட்டன. தோல்விகளும் துரத்தியபடி இருந்தன.போராளிகளின் விலை மதிப்பற்ற உயிர்களும் அப்பாவி மக்களின் உயிர்களும் உடமைகளும் அழிக்கப்பட்டன. ஆனால் தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதம் தாங்கிய போராட்டம் திரட்சியடைந்து உயர்ந்து உலகின் காதுகளும் கண்களும் கேட்டும் பார்த்தும் வியப்படைந்த அளவிற்கு வியாபித்தது.

பத்துக்கு மேற்பட்ட விடுதலை அமைப்புக்கள் போராட்ட களத்தில் நிற்பது போன்று காணப்பட்டாலும் நாளடைவில் பல அமைப்புக்கள் இல்லாமற் போகவும். இயக்க மோதல்களில் பின்வாங்கி நிற்கவும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒன்றே இறுதிவரை முப்படைகள் கொண்ட ஒரு விடுதலை இயக்கமாக வியாபித்து விளங்கியது. ஒரு சிற்றரசு போன்று செயற்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாகத்தின் கீழ் நீதி மன்றம், காவல் துறை மற்றும் வைத்தியசாலைகள் வங்கிகள் என அரசாங்கத்திற்குரிய கட்டமைப்புக்கள் உருவாகின.

ஆனால் இவ்வாறான ஒரு வளர்ச்சியை தடுக்கும் வகையில் இலங்கை அரசாங்கமும், வெளிநாடுகள் சிலவும் இரகசியமாக திட்டங்களைத் தீட்டி நின்ற போது விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பாதிப்புக்கள் ஏற்படாமல் இருக்கவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு, தலைவர் பிரபாகரன் தலைமையில் பலமான ஒரு அமைப்பாக விளங்கி, உலகெங்குமிருந்து ஊடகங்களையே வன்னிக்கு வரவழைத்த அற்புதத்தை அரங்கேற்றிய நேரத்தில் கூட உள்ளக முரண்பாடுகள் காரணமாக உள்ளே இருந்து தோன்றிய துரோகத்தனங்களும் விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு கட்டியம் கூறத்தொடங்கியதை தமிழ் மக்களே கண்கூடாகக் பார்த்த நாட்கள் இன்னும் மறையவில்லை.

எனினும் ஏற்கெனவே மாத்தையா போன்ற போராளிகளின் மனமாற்றம் மற்றும் காட்டிக் கொடுத்த துணிவைப் போன்று விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்படத் தொடங்கியவர்களில் கருணா என்னும் விநாயகமூர்த்தி முரளிதரன் முக்கியமான ஒரு தனிநபராகத் தென்பட்டார். விடுதலைப்புலிகள் இயக்கத்தை விட்டு நீங்கியது, பின்னர் இலங்கை அரசாங்கத்தோடு இணைந்து கொண்டு இயக்கத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டது போன்ற காரியங்களில் எவ்வித கூச்சமும் இன்றி செயற்பட்ட கருணா என்னும் விநாயகமூர்த்தி முரளிதரன் அரசாங்கத்தில் துணை அமைச்சராக விளங்கி தன்னைப் பலப்படுத்திக் கொண்ட நாட்கள் எமது மக்களும் ஊடகங்களும் அரசியல்வாதிகளும் நன்கு அறிந்த விடயங்களே.

இவ்வாறான ‘கருணா’வின் செயற்பாடுகள் பலவற்றை நாம் இங்கு குறிப்பிட வேண்டிய அவசியமே இல்லை. அனைவரும் அறிந்த விடயங்கள் அவை.

இவ்வாறு தோன்றுவதும் மறைவதுமாக இருந்த கருணா, கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினாலும் இலங்கைப் பிரதமர் மகிந்த வழங்கிய ஒரு பதவி மூலம், பொலில் மற்றும் இராணுவத்தின் பாதுகாப்போடு வடக்கிலும் பொதுவெளியில் கால் வைக்கத் தொடங்கிவிட்டார். இவை பலருக்கு ஆச்சரியத்தை தரும் விடயமாக இருந்தாலும், தடுக்க முடியாததும் தவிர்க்க முடியாததுமான காட்சிகளாகிவிட்டன.

இதற்கு மறுபக்கத்தில் இலங்கையின் கொடிய சிறைகளில் வாடும் நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகளும், வருடங்கள் பலவாக வீதிகளில் நின்று போராடிக் கொண்டிருக்கும் காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் தொடர்ந்து துன்பத்தின் பிடிகளில் அகப்பட்டுக் கொண்டவர்களாய் வாடுகின்றனர், வருந்துகின்றனர். ஆனால் அவர்களிடத்தில் சென்று ஆறுதல் சொல்ல முடியாமல் அல்லது பார்க்க முடியாமல் உள்ள எமது மக்கள் அல்லது அரசியல்வாதிகள் ஆகியோரின் நிலை வேறு.

இவ்வாறாக நாட்கள் நகர்ந்து செல்கையில் தான் கருணா என்னும் விநாயகமூர்த்தி முரளிதரன் தற்போதைய பிரதமரின் ஒரு பிரதிநிதியாகவும் தனது கட்சியின் தலைவராகவும் வன்னி மண்ணில்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca